MITRA TIMES Tam & Eng Monthly Postal Registration No. TN/CH(C)/523/16-18
Registered with Registrar of News Paper for India Under No. TNBIL/2015/64028 - 1ST WEEK OF EVERY MONTH


# திண்டுக்கல் மாவட்டம் பழனி முருகன் கோயில் அருகில் உள்ள விஜயகுமார் மில் விற்பனைக்கு...




| | |
|---|---|
| Total Extent of the Land | 43.2 Acres |
| Vacant land | 9.2 Acres |
| Mill area with compound wall | 34.0 Acres |
| Total Frontage | 1792 ft or 546 Metres |

## MOORTHY & ASSOCIATES

501,SURUTHI BLOCK, CHITRA AVENUE, 9,CHOOLAIMEDU HIGH ROAD,
CHOOLAIMEDU, CHENNAI-600094. PHONE 23743007/23743008 FAX 42697147
Email msmoorthy68@yahoo.co.in

**Contact for further information**

9487856999 / 9940070204 / 9840719088





# மித்ரா டைம்ஸ்

# MITRA TIMES

ஆண்டு-2 Volume-2 | இதழ்-2 Issue-2 | ஜூலை - 2016 July - 2016 | தமிழ் & ஆங்கிலம் மாத இதழ் Tamil & English Monthly | விலை ரூ.10/- Price Rs.10/- | ஆண்டு சந்தா ரூ.120/- Annual Subscription Rs.120/-






விழலுக்கு பாயும் நீராக

## வீணாகும் மு.க.ஸ்டாலின் உழைப்பு

உள்ளாட்சித் தேர்தல்

## அடுத்த ஆடுகளம் ஆரம்பம்

அதிரடி வில்லன் அடுத்து ரெடி...
தமிழ் சினிமாவை கலக்கும்

## ஸ்ரீபவன்





# இடிந்து விழும் நிலையில் தீயணைப்புத்துறை அலுவலகம்

### இடம் மாறினால் உயிரிழப்பை தடுக்கலாம்!

ஏற்காட்டில் தீயணைப்புத்துறை அலுவலகம் டவுன் அருகாமையிலேயே அமைந்துள்ளது/ இது 100 ஆண்டிற்கும் பழமையான கட்டிடம் இந்த கட்டிடம் 1987 ஆண்டு தீயணைப்பு துறை அலவலகமாக தமிழ்நாடு அரசால் தீர்மானிக்கப்பட்டது. அதுவும் இக் கட்டிடம் அருகில் உள்ள திருச்சபைக்கு உரியது. மாத வாடகை என்ற கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது இந்த கட்டிடம். மிக பழமையானது என்பதால் எப்போது இடிந்து விழும் என்ற அச்சத்திலேயே பணியாற்றி வருகின்றனர்.



இப்படி உழைப்பர்களுக்கென்று எந்த ஒரு வசதியும் இல்லை. மேலும் தீயணைப்பு துறை அலுவலகம் அருகில் நீர் வசதி இல்லாததால் கோடை காலத்தில் தீயணைப்புத்துறையினருக்கு சிக்கல் ஏற்படுகிறது. கோடை காலத்தில் ஆங்காங்கே தீ பற்றி கொள்வதால் பெரும் சிரமம் ஏற்படுகிறது.

கோடை காலத்தில் ஆங்காங்கே தீ பற்றிக் கொள்வதால் திடீரென்று புறப்பட தாமதமாகிறது. ஏனெனில் நீர் எடுப்பதற்காக ஏற்காடு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஏரியில் தான் நீர் ஏற்றிச் செல்கிறார்கள்.



அரசு அதிகாரிகளுக்கு பயன்படுத்த கூட நீர் இல்லா சூழ்நிலையில் உள்ளது. ஏற்காடு தீயணைப்புத்துறை. ஆகையால் தீயணைப்புத்துறை யினருக்கு நீர் வசதி உள்ள இடத்தில் அலுவலகம் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்பதே பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலரின் கருத்து.

**–சேலம். பிரேம்குமார்**

Owned and published by **M.SUNDARAMOORTHY** from No. 602 Suruthi Block, Chitra Avenue, 9, Choolaimedu High Road, Chennai - 600 094. and printed by him at **SRI PADMALAYA PRINTERS**. No.8/18, Manali Salai, Korukkupet, Chennai - 600 021. Editor : **M.SUNDARAMOORTHY**



### உள்ளாட்சி தேர்தல்:

# அடுத்த ஆடுகளம் ஆரம்பம்





அன்புடையீர்! வணக்கம். சட்டப்பேரவை தேர்தல் முடிந்து ஆட்சியில் அமர்ந்த அ.தி.மு.க அரசு அடுத்த கட்டமாக ஆடுகளத்தை ஆரம்பித்து விட்டது. அதுதான் எதிர்வரும் அக்டோபரில் உள்ளாட்சி தேர்தல் நடத்துவது என்ற திட்டம். சமீபத்தில் சட்டப்பேரவையில் உள்ளாட்சித்துறை அமைச்சர் 2 சட்ட திருத்த மசோதாவை கொண்டு வந்தபோது, ஆரம்ப நிலையிலேயே தி.மு.க. அதை எதிர்த்தது. ஆயினும் குரல் வாக்கெடுப்பு மூலம் மசோதா நிறைவேறிவிட்டது.

குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், வழக்கமாக மேயரை மக்கள் தேர்ந்தெடுக்கும் முறையை மாற்றி இனி கவுன்சிலர்களே மறைமுகமாக தேர்ந்தெடுக்கும் முறையை







# என் எண்ணம்...



ஆசிரியர் எம்.எஸ்.மூர்த்தி

# மித்ரா டைம்ஸ்

மாத இதழ்

ஆண்டு-2 ஜூலை -2016 இதழ் -2



வெளியீட்டாளர்-ஆசிரியர்

M.சுந்தரமூர்த்தி

இணையாசிரியர்

K.பாலகிருஷ்ணன்

தலைமை துணையாசிரியர்கள்

G.ராம்மோகன்

S.சுஜாதா மூர்த்தி

துணையாசிரியர்

M.G.சேகர்

உதவி ஆசிரியர்

V.மோகன்ராஜ்

தலைமை நிருபர்கள்

R.குணசேகர்

மதுரை S.செல்லப்பாண்டியன்

நிருபர்கள்

கோவை M.சாகுல் ஹமீது

திண்டுக்கல் முபாரக்

சேலம் பிரவீன்குமார்

திருப்பூர் R.அருண்

சென்னை R.பாண்டியன்

கோயில்பட்டி S.சுரேஷ்குமார்

வடிவமைப்பு

V.ராஜராஜேஸ்வரி

சட்ட ஆலோசகர்

V.N.பிரசாத் M.A.,B.L.,



அலுவலக முகவரி

# 602, ஸ்ருதி பிளாக், சித்ரா அவென்யூ,
9, சூளைமேடு ஹைரோடு, சென்னை -94.
போன் : 044-23744661, 23743007
e-mail:mitratimes2015@gmail.com



இந்த இதழில் வெளியாகும் செய்திகள் அனைத்திற்கும் இணையாசிரியரே

எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது


கொண்டு வருவதாகும். இதற்கு பெரும்பாலான கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. குதிரை பேரம் நடக்குமென்று முன்கூட்டியே குரல் எழுப்புகிறார்கள்.

நம்முடைய கருத்து இதில் என்னவென்றால், மக்கள் கவுன்சிலர்களை தேர்ந்தெடுக்கிறார்கள். அந்த கவுன்சிலர்களில் ஒருவர் மேயராக தேர்ந்தெடுக்கப்படுகிறார். பெரும் பான்மையான கவுன்சிலர்களால் தான் மேயர் தேர்ந்தெடுக்கப்படுவார். இதில் குழப்பமோ, குதிரை பேரம் நடக்கவோ வாய்ப்பிருக்காது. ஏனென்றால் ஒரு கட்சியை சேர்ந்த அதிகபட்ச கவுன்சிலர்கள் தான் மேயரை தேர்ந்தெடுப்பார்கள்.

இப்போதைய ரேஸில் அ.தி.மு.க., தி.மு.க. ஆகிய பிரதான கட்சிகள் உள்ளன. காங்கிரஸ் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் ராஜினாமா செய்து உள்ளதால் கூட்டணியில் மாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு. எனினும், எதிர்கட்சி வெற்றி பெற்றால் ஆளுங்கட்சியோடு மோதல் போக்கு தொடரும் என்பதால் ஆளுங்கட்சியே உள்ளாட்சி தேர்தலில் வெற்றி பெற்றால் தேவையான திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்று மக்கள் நினைத்துவிட்டால் அ.தி.மு.க. வெற்றி பெறுவதற்கு வாய்ப்புள்ளது.

இந்த உள்ளாட்சி தேர்தலில் பெண்களுக்கு 50 சதவீத இடஒதுக்கீட்டு முறையும் அமுல்படுத்தப் படவுள்ளது. பொதுவாக அதிகாரத்திற்கு வரும் பெண்களை அவர்களது கணவரோ, மகனோ, சகோதரர்களோ தான் பின்னாடி இருந்து இயக்குகிறார்கள். அப்படியில்லாமல் பெண்களின் நேரடி நிர்வாக பங்களிப்பு இருந்தால் தான் இந்த சட்டத்தின் நோக்கம் நிறைவேறும்.

தமிழக அரசியலில் உள்ளாட்சி தேர்தல் மூலமாக அடுத்த ஆடுகளம் ஆரம்பமாகி விட்டது.

நல்லதே நடக்கும் என்று நம்புவோம். ●







# மரமே நீ எங்கே...?

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் தெலுங்கானா ஒடிசா மாநிலங்களில் சூரிய வெப்பம் தாங்காமல் ஏறத்தாழ அறுபது பேர் இறந்து இருக்கிறார்கள். அந்த மாநிலங்களில் அதிகபட்சமாக பதிவான வெயில் அளவு 41 டிகிரி செல்சியஸ். இந்த அளவு வெப்பத்திற்கு ஏராளமான காரணங்கள் இருந்தாலும், காடுகள் அழிப்பு பிரதான காரணம் ஆகும்.

அது மட்டுமல்ல, வளர்ச்சியின் பெயரால், சாலை விரிவாக்க பணி களுக்காக வெட்டப்பட்ட மரங்களால், வாகன ஓட்டிகளாகிய நாம் ஒதுங்க நிழல் கூட இல்லாமல் தத்தளித்துக் கொண்டி ருக்கிறோம். கர்நாடக மாநிலத்தில் உள்ள பெல்கவியில் இருந்து கோவா பனாஜி வரை சாலைகள் விரிவாக்கப் பணிக்காக வெட்ட திட்ட மிடப்பட்டுள்ள மரங்களின் எண்ணிக்கை 37,682 மரங்கள்.

வெயில் காலத்திலும் மெல்லிய குளிர்ச்சியாக இருக்கும் பெங்களூரில், கடந்த இரண்டு ஆண்டுகளாக சென்னை அளவிற்கு வெயில், சில நாட்கள் சென்னையை விட வெயில் அதிகம். நாம் என்ன செய்வதாக உத்தேசம்? இதே நிலை தொடர்ந்தால், நாளை சாலைகள் இருக்கும். உயர்ந்த கட்டிடங்கள் இருக்கும். ஆனால் வசிக்க மக்கள் இருக்க மாட்டார்கள். இது வெறும் பிதற்றலாக கருதி, ஒரு கிராமத்து சாலையை கடந்து செல்வது போல் கடந்து சென்று விடாதீர்கள். ஒரு மோசமான சூழ்நிலையை எதிர்கொள்ளப் போகிறோம்.

கேரளாவிடம் இருந்து கற்றுக் கொள்ள நமக்கு ஏராளமான விஷயங்கள் இருக்கின்றன. அதில் ஒன்று சாலையும், அதன் பராமரிப்பும் மற்றும் சுங்க வசூலும். கோவையில் இருந்து பாலக்காடு, கோழிக் கோடு, கண்ணூர் மற்றும் காசர்கோடு வழியாக நீண்ட பயணத்தில் எங்கும் சாலை விரிவாக்க பணிக்காக மரங்களை வெட்டப்பட்டுள்ளதை பார்க்கை முடியவில்லை. அங்கு இரண்டு வழி சாலைகள் தான்.


பல தலைமுறைகளை பார்த்த மரங்கள் சாலையின் இரு மருங்கிலும் கம்பீரமாக நிற்கின்றன. எந்த பிரச்சினைகளும் இன்றி விலையுயர்ந்த கார்கள் சென்று கொண்டு தான் இருக்கின்றன. சாலை விரிவாக்கம் செய்ய அரசு முடிவு செய்தபோது, மக்கள் அதை எதிர்த்துள்ளனர். இருக்கும் சாலைகளே போதும் என்று சொல்லி இருக்கின்றனர்.

-ஜானகி
IX-A Std - GOOD SHEPHERD-
MATRICULATION HIGHER SECONDARY SCHOOL

# குதூகலமாய் வாழ போடுங்க "குடும்ப பட்ஜெட்"

**"வரவு எட்டனா செலவு பத்தனா"** என்று கூறும் காலம் எக்காலத்திற்கும் பொருந்தும். ஏழை குடும்பத்திலிருந்து பணக்காரக் குடும்பம் வரை அவரவர் தேவைக்கேற்ப வரவுகளும் செலவுகளும் வருகின்றது. அதில் சிலரே ஒழுங்கான பட்ஜெட் போட்டு குடும்பத்தை நடத்துகின்றனர். சிலர் வருங்காலத் தேவைக்காகவும் சேர்க்கின்றனர். சிலர் வரிசையாக பட்ஜெட் போட்டாலும் செயல் படுத்த தெரியாமல் பணத்தை இழக்கின்றனர். மாதம் ஒரு லட்சம் ரூபாய் சம்பளம் வாங்கினாலும் போதவில்லை என்று கூறும் சிலர் ஒருபக்கம் இருக்க, மற்றொரு பக்கம் பட்ஜெட்டிற்குள் வருமான பணத்தை அடக்க முடியவில்லை என்று புலம்பும் சில குடும்பங்களும் உள்ளது. இதுவே பெரும்பான்மை என்றும் கூறலாம். சம்பளமும்... செலவுகளும்.. சம்பளம் உயர உயர அதற்கான செலவையும் ஏற்றி கொள்கின்றனர். இதனால் தற்பொழுதைய தேவையைக் கூட நிறைவேற்றி கொள்ள முடியாமல் தவிக்கும் மக்கள் பலரை நாம் அன்றாட வாழ்க்கையில் பார்த்து வருகிறோம்.

குடும்ப பட்ஜெட் கணவன், மனைவி, குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் பட்ஜெட்டிற்குள் குடும்பம் நடத்துவதில் பங்கு உள்ளது. இருப்பதை விட்டு பறப்பதற்கு ஆசைப்பட்டால், உள்ளதும் போய்விடும் என்பதை மறக்க கூடாது. நம் தாத்தா பாட்டி காலத்திலிருந்து பட்ஜெட் போட்டு குடும்பம் நடத்துவது பழக்கத்தில் இருந்தாலும் இன்றும் நம் மக்களுக்கு வரவு செலவை சமாளிக்கும் சூட்சமம் புரியவில்லை. பட்ஜெட் உங்களுக்கு மிகவும் அவசியமான ஒன்று. இது இருந்தால் நாம் சம்பாதிக்கும் பணத்தை சரியான முறையில் செலவிடவும் பாதுகாக்கவும் ஏதுவாக இருக்கும். இல்லையெனில் பாடுபட்டு சம்பாதித்த பணம் வீணாகும்.







பட்ஜெட் போட மூன்று வழிகள் 1. எப்படி பணத்தை செலவு செய்கின்றீர்கள் என்பதை அறிந்து கொள்ளுதல் முக்கியம். 2. தற்பொழுது எப்படி செலவு செய்கின்றீர்கள் என்பதை கணகிட்டு வாழ்நாள் முழுவதற்குமான தேவையை சிந்தித்து பட்ஜெட் போடுவது மிக மிக அவசியம். 3. உங்கள் செலவுகள் உங்கள் பட்ஜெட்டிற் குள் உள்ளதா என்பதை ஆராய்தல் போன்றவை பட்ஜெட் போடுவதற்கான மூன்று சிறந்த வழிகள்.

உங்களால் பட்ஜெட் போட முடியவில்லையென்றால் அதற்கும் ஒரு சிறந்த வழி உள்ளது. தற்பொழுது வளர்ந்து வரும் நவீன உலகில் இதற்கென பல மென்பொருள் கருவிகள் உள்ளன. அவற்றில் உங்கள் வரவு செலவு கணக்கை பதிவு செய்தால் அவை உங்கள் பட்ஜெட்டை வரைந்து கொடுக்கும்.

தேவையற்ற செலவை கண்டு கொள்ள வேண்டாம். மென் பொருள் உதவியுடன் போடப்படும் பட்ஜெட்டில் ஒரு குறையுள்ளது. அது அவசியமில்லா சில கணக்குகளை கொடுக்கலாம். எது தேவையோ அதில் கவனம் செலுத்துங்கள். எதற்கு முக்கியமாக கவனம் செலுத்த வேண்டும் எதன் செலவை குறைக்க வேண்டும் என்பது உங்களுக்குதான் தெரியும்.

செலவுகளை கண்காணியுங்கள் நீங்கள் ஏடிஎம் மூலம் எடுக்கும் பணம் உங்கள் பாக்கெட்டை விட்டு மிகுதியாக கரைகிறது என்றால் கவனம் தேவை. அதற்கு உங்கள் செலவை பற்றிய கணக்கையும் குறிப்பையும் வைத்து கொள்ளுங்கள். ஏடிஎம் வாசலை நீங்கள் வாரம் இருமுறை மிதிக்கின்றீர்கள் என்றால் உங்கள் பட்ஜெட் உங்களை மீறி செல்கின்றது எனவே கவனம் தேவை.

வரவுக்கு மீறிய செலவு வேண்டாமே நிறைய குடும்பங்களில் வரம்பிற்கு மீறிய செலவு உள்ளது. சில குடும்பங்களில் 50,000

ரூபாய் சம்பளம் வாங்கினால் அதற்கு மீறிய செலவு வைத்துள்ளனர். இது தொடர்ந்தால் நிலைமை மோசமாகி ஓட்டாண்டி ஆக வேண்டியதுதான் எனவே கவனம் சிக்கனத்தில் இருக்கட்டும். சிக்கனம் பட்ஜெட்டில் இருக்கட்டும்.

தேவை என்ற போர்வையில் ஆடம்பர செலவு சில வேளைகளில் தேவையான செலவு என்று ஆடம்பர செலவில் கவனம் செலுத்துவோம். நம்மையும் அறியாமல் இந்த செலவு நம்முள் வரும். எது தேவை எது ஆடம்பரம் என்று தெரியாமல் ஆடம்பர செலவை தேவையான செலவு என்று எண்ணி பணத்தை இழப்பதை தவிர்க்கவும்.

உங்கள் செலவை ஆராய கற்றுக் கொள்ளுங்கள் உங்கள் சம்பளத்தின் 90 சதவிகிதத்திற்கு மேல் செலவு செய்யக் கூடாது என்பதில் கவனமாக இருங்கள். செலவு வரதான் செய்யும். ஆனால் அதை எப்படி கட்டுக்குள் வைக்க வேண்டும் என்று நமக்குதான் தெரிய வேண்டும். நம் பட்ஜெட் நம் கையில்தான். (உன் வாழ்க்கை உன் கையில்) ஆகாயத்தில் கோட்டைக் கட்ட வேண்டாம் உங்கள் வரவு செலவு உங்களுக்கு தான் தெரியும். அதை உணராமல் அதிக பேராசை உங்களை வீழ்த்தி விடும் என்பதை மறந்து விடாதீர்கள். வரவுக்கேற்ற செலவுதான் புத்திசாலிக்கு அழகு.

பட்ஜெட் உடையாமல் பார்த்து கொள்ளுங்கள் உங்கள் ஆண்டின் வருமானம் கூடக் கூடக் புத்திசாலித்தன மான சேமிப்புத் திட்டங்களை செய்யுங்கள். ஆடம்பர தேவைகளை குறைத்து கொள்ளுங்கள். பட்ஜெட் உங்கள் வரவை காக்க வேண்டும். இன்றைய வரவு நாளையை முன்னேற்றத்தை கொடுக்க வேண்டும் என்பதில் கவனமாக இருங்கள்.

**–சுமதி தினேஷ்**


## மித்ரா டைம்ஸ் மாத இதழ்

ஆண்டு சந்தா-120

### ஆண்டு சந்தா படிவம்




பெயர் :..........................................................

முகவரி :..........................................................

..........................................................

..........................................................

..........................................................

மாநிலம் :..........................................................

தொலைபேசி :..........................................................

கைபேசி :..........................................................

மின்னஞ்சல் :..........................................................

காசோலை & டி.டி. விவரம்:

எண் :..........................................................

வங்கி :.....................................தேதி.................

தொகை :..........................................................

**அனுப்ப வேண்டிய முகவரி :**

மித்ரா டைம்ஸ் மாத இதழ்

#602, ஸ்ருதி பிளாக், சித்ரா அவென்யூ, 9, சூளைமேடு ஹைரோடு,

சென்னை-600 094. போன்:044-23744662, 23743007.






# புத்திசாலிப் புள்ள பொழச்சிக்கும்



ஒரு ராஜா தன் மந்திரியை எப்போதும் சிற்றரசர்களிடமிருந்து கப்பம் வசூலித்து வர அனுப்புவார். திரும்பும் போது ஒரு அடர்ந்த காட்டை கடந்து வரவேண்டும். மந்திரி கூட நான்கு காவல்காரர்களையும் அழைத்துச் செல்வார். ஒரு முறை அவர் திரும்ப மிக நேரமாகி விடுகிறது. காட்டு வழியே வரும்போது திருடர்கள் வந்து வழிமறிக் கிறார்கள்.

மந்திரியும் காவலர்களும் வந்திருக்கும் கூட்டத்தைப் பார்த்து திகைத்து இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு நின்று விடுகிறார் கள். எங்கிருந்தோ ஆறு இளைஞர்கள் வந்து அவர்களை காப்பாற்றுகிறார்கள்.

மந்திரியுடன் ஆறு இளைஞர்களும் ராஜாவிடம் வருகிறார்கள். ராஜாவும் மிகவும் சந்தோஷமடைந்து இளைஞர் களிடம், உங்களுக்கு எது வேண்டு மானாலும் கேளுங்கள் தருகிறேன்" என்று கூறுகிறார். "முதல்" இளைஞன் பண வசதி வேண்டும் என்று கேட்கிறான்.

"இரண்டாவது" இளைஞன் வசிக்க நல்ல வீடு வேண்டும் என்று கேட்கிறான். "மூன்றாவது" இளைஞன் தான் வசிக்கும் கிராமத்தில் சாலைகள சீர் செய்ய வேண்டும் என்று கேட்கிறான்."நான்காவது" இளைஞன் தான் விரும்பும் செல்வந்தரின் மகளை திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று கேட்கிறான்.

"ஐந்தாவது"இளைஞன் தன் குடும்பத்தினர் இழந்த மிராசுதார் என்ற பட்டம் மறுபடி வேண்டும் என்று கேட்கிறான். அனைத்தையும் தருகிறேன் என்று சொன்ன ராஜா "ஆறாவது"* இளைஞனைப் பார்த்து "உனக்கு என்ன வேண்டும்" என்று கேட்கிறான். இளைஞன் சற்று தயங்குகிறான்,

ராஜா மீண்டும் கேட்க இளைஞன் கூறுகிறான்,"அரசே எனக்கு பொன், பொருள் என்று எதுவும் வேண்டாம். வருடம் ஒருமுறை நீங்கள் ஒரு வாரம் அல்லது 10 நாட்கள் என்னுடன் இருந்தால் போதும்" என்று சொன்னான்.

ராஜாவும் இவ்வளவுதானா என்று முதலில் கேட்டான். பிறகுதான் இளைஞனின் கோரிக்கையில் ஒளிந்து இருந்த உண்மையை. தெரிந்து கொண்டான்...

ஆம். ராஜா அவன் வீட்டில் போய் இருக்க வேண்டுமென்றால், அவன் வீடு நன்றாக இருக்க வேண்டும். அந்த ஊருக்கு செல்லும் சாலைகள் நன்றாக இருக்க வேண்டும். வேலைக்காரர்கள் வேண்டும். அவனுக்கும் ஒரு தகுதி இருக்க வேண்டும். சொல்லப் போனால் முதல் ஐந்து இளைஞர்கள் கேட்டது எல்லாம் இவனுக்கும் இருக்க வேண்டும் என்று தன் மகளையே திருமணம் செய்து கொடுத்தார்.

இந்தக் கதையில் கூறிய ராஜாதான் அந்த இறைவன். பொதுவாக எல்லோரும் இறைவனிடம் கதையில் கூறிய, முதல் ஐந்து இளைஞர்களைப் போல், தனக்கு வேண்டியதைக் கேட்பார்கள். கடைசி இளைஞனைப் போல் இறைவனே நம்மிடம் வரவேண்டும் என்று பிரார்த்தனை செய்தால் , மற்றவை எல்லாம் தானாக வந்து சேரும் என்பதற்கு, எடுத்துக் காட்டாக இந்தக் கதையைக் கூறினார்.

**–சொற்பொழிவில் கேட்டது**

ஓவிய எழுத்தாக தொடங்கிய வரிவடிவம், படிப்படியாக வளர்ந்து, பல மாறுதல்களை அடைந்து, இன்றைய எழுத்துகளாக மலர்ந்தது. இன்றைய எழுத்துக்கு 5 ஆயிரம் வயது ஆகிறது என்று மொழிநூல் வல்லுநர் கூறுகிறார்கள். எழுத்துக்கள் இன்றும், மின்னணுக் காலத்துக்கு ஏற்ப, வளர்ச்சி அடைந்து கொண்டும், மறுமலர்ச்சி அடைந்து கொண்டும் இருக்கின்றன.

நம் தமிழ்மொழியை எடுத்துக் கொண்டால், உலகில் மூத்த மொழிகள் ஐந்தினுள் தமிழும் ஒன்று. மற்ற மொழிகள் எகிப்து, பாபிலோன், சுமேரியன், எல்லாம் ஆகியவை ஆகும். தமிழின் தொடக்கம் சிந்துவெளி எழுத்துகள் அவை கி.மு. முப்பதாம் நூற்றாண்டுக்கு முந்தியவை என்று நிர்ணயித்து இருக்கிறார்கள். ஆனால், கி.பி. இருபதாம் நூற்றாண்டில் கூட தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் நடந்து கொண்டு இருக்கிறது.

தந்தை பெரியாரின் தமிழ் எழுத்து சீர்த்திருத்தத்தை அதிகார பூர்வமாக ஏற்று அனைத்துத் துறையிலும் பயன்படுத்த பெரியார் நூற்றாண்டு விழாவின்போது (19/10/1978)ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சீன எழுத்தையும் சீன அரசே சீர்திருத்திக் கொண்டு இருக்கிறது. ஓவிய எழுத்தான சீனத்தில் ஒவ்வொரு சொல்லிற்கும் ஓர் எழுத்து உண்டு! இதனால் எழுத்துகள் ஆயிரக்கணக்கில் இருந்தன. 30 ஆயிரம் எழுத்துக்கள் இருந்தன. நடைமுறையில் 3700 எழுத்துகள் பயன்படுகின்றன. இவற்றை 400 எழுத்துக்களுக்குள் அடக்க முயற்சி நடக்கிறது. ஜப்பான் மொழியிலும் 4 ஆயிரத்துக்கு மேற்பட்ட எழுத்துகள் உள்ளன. இப்படிச் சில மொழிகள் காலத்துக்கு ஏற்ப சீர்திருத்தம் அடைந்து வரும்போது, வேறுசில மொழிகள் கால வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படு கின்றன. இந்த மொழிகளுக்கு வரிவடிவம் இல்லாததே அதற்கு காரணம்.



# மொழியின் வரலாறு

## தொடர் 3

உலகம் முழுவதும் 15 ஆயிரம் மொழிகள் பேசப்படுகின்றன. 3 ஆயிரம் முதல் 12 ஆயிரம் கிளை மொழிகள் இந்தியாவில் மட்டும் 1200 கிளை மொழிகள் உள்ளன. மொத்தம் 3 ஆயிரம் மொழிகளுக்கு மட்டுமே எழுத்து வடிவம் இருக்கிறது. மற்றைய மொழிகள் இன்றும் ஒலி வடிவில் தான் உயிர் வாழ்ந்து கொண்டு காண்டு இருக்கின்றன. ஆப்பிரிக்காவில் மட்டும் வரிவடிவம் இல்லாத 1500 மொழிகள் உள்ளன.





இம்மொழிகள் எல்லாம் நாளுக்கு நாள் செத்துக் கொண்டிருக்கின்றன. ஏசுநாதர் பேசிய அரமேய்க் மொழி இன்று இல்லை.

சில மொழிகள் பிறமொழி எழுத்தில் எழுதப்பட்டு, புத்துயிர் பெறுகின்றன. பிஜி மொழி ஆங்கிலத்தில் எழுதப்படுகிறது. ரஷியாவில் உள்ள லாட்வியா மொழிக்கு இருவகை எழுத்துகள் உள்ளன. எழுதுவதற்கு இலத்தீன் எழுத்துக் களையும், அச்சிட ஜெர்மானிய எழுத்துக் களையும் பயன்படுத்துகிறார்கள்.


கண்ணால் பார்த்துப் படிக்க முடியாதவர்கள் கையால் தொட்டு உணர்ந்து படிக்க ஒருவித தடித்த எழுத்துக்கள் இருக்கின்றன. "பிரெயில்" என்ற பிரெஞ்சுக்காரர் கண்டுபிடித்த அந்த எழுத்துக்கள், அவர் பெயரால், "பிரெயில் எழுத்துக்கள்" என்று வழங்கப்படுகின்றன. மூன்று வயதில் பார்வை இழந்தவர் ப்ரெயில் அவர் படித்து பாரிசில் உள்ள விழி இழந்தோர் பள்ளியில் ஆசிரியர் ஆனார். அந்தப் பள்ளியில், பிரெஞ்சு குதிரைப்படை வீரர் பார்பியர் என்பவர் படைத்த எழுத்துகள் பார்வையற்றவர்களுக்குப் பயன்பட்டு வந்தன. பிரெயில் அந்த எழுத்துக்களைத் திருத்தி அமைத்து 1829ல் வெளியிட்டார்.

சில நாடுகளில் பிரெயில் எழுத்தில் இதழ்கள் வெளிவருகின்றன. உலகப் புகழ் பெற்ற "ரீடர்ஸ் டைஜஸ்டு" இந்த எழுத்தில் ஒரு பதிப்பு வெளியிடுகிறது. ஜப்பானில் யூசிதெரானிசி என்ற பார்வையற்றவர், பிரெயில் இதழ் ஒன்றை நடத்துகிறார்.

ஒலிப்பதிவு நாடாக்கள் வந்த பின்பு இந்த எழுத்தின் தேவை குறைந்துவிட்டது. இவர்களுக்கு ஏடுகளையும் இதழ்களையும் படித்துக் காட்ட, அமெரிக்கா ஜப்பான் போன்ற நாடுகளில் கணிப்பொறிகள் வந்துள்ளன.

-தொடரும்

# ஈரல் நோய்கள் தீர சில எளிய மருந்துகள்



பாகற்காய் சாறு 10 மில்லி கீழாநெல்லி இலைச்சாறு 10 மில்லி மோரில் கலந்து குடிக்க மஞ்சள் காமாலை நோய் நீங்கும்.

கரிசலாங்கண்ணிச் சாறு 500 மி.லி. ஆமணக்கு எண்ணெய் 500 மி.லி. கலந்து அதில் 500 கிராம் வெள்ளைப் பூண்டு சேர்த்து எரித்து பதத்தில் வடித்துக் கொண்டு வேளை ஒன்றுக்கு 3 தேக்கரண்டி அளவு கொடுக்க வீக்கம், காமாலை, குட்டம் இவை நீங்கும்.

வாழைத்தண்டை சிறு துண்டுகளாக்கி இஞ்சி, எலுமிச்சம் பழச்சாறு, பூண்டு, மிளகு போன்றவற்றைக் கலந்து கொதிக்க வைத்து பிறகு தாளித்து வைத்துக் கொண்டு மூன்று வேளையும் சாப்பிட மஞ்சள் காமாலை குணமாகும்.

கீழா நெல்லி இலையுடன், சிற்றாமணக்கு இலையையும், சமஅளவு எடுத்து அரைத்து மூன்று நாளைக்கு காலையில் எலுமிச்சங்காய் அளவு கொண்டுவர மஞ்சள் காமாலை நோய் மறையும்.

மருதாணி, மரப்பட்டையைத் தூளாக்கி கஷாயம் வைத்துக் குடித்துவர மஞ்சள் காமாலை, கல்லீரல், மண்ணீரல் வீக்கம் ஆகியன குறையும்.

ஏலக்காய், சீரகம், கீழாநெல்லி சமஎடையாக உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து சர்க்கரை கலந்து பசும்பாலில் உட்கொள்ள காமாலை நோய் தீரும்.

விளாம்பழத்துடன் சர்க்கரை கலந்து பிசைந்து சாப்பிட்டால் கல்லீரல் வீக்கத்தைக் குறைக்கலாம்.

மரமஞ்சளின் சாற்றில் தேன் கலந்து காலை வேளையில் பருகி வந்தால் காமாலை தணியும்.

கீழாநெல்லிச் சமூலத்தை (வேர், பூ, காய், செடி) கொண்டு வந்து அரைத்து கொட்டைப் பாக்களவு பாலுடன் உண்டு வந்தால், மூன்றே நாட்களில் மஞ்சள் காமாலை சரியாகும். உப்பு, புளி நீக்கி பத்திய உணவு உட்கொள்ள வேண்டும்.

10 கிராம் கருவேலம் பூக்களை அரைத்து வடிக்கட்டி குடித்தால் மஞ்சள் காமாலை நோய் குணமாகும்.

மருதாணி சாற்றை ஏழு நாட்களுக்கு பிரதி தினம் இரண்டு தேக்கரண்டி வீதம் அதிகாலை வெறும் வயிற்றில் அருந்த மஞ்சள் காமாலை மறையும்.

பூவரசு இலைக் கொழுந்துடன் ஐந்து சேர்த்து அரைத்து எலுமிச்சை அளவு மோரில் கலந்து மூன்று வேளை சாப்பிட காமாலை குணமாகும்.

ஆளி விதையை எரித்து சாம்பலாக்கி தேனில் குழைத்து வயிற்றின் மீது பூசிவர கல்லீரல் வீக்கம் குறையும்.

மூக்கிரட்டை இலைச் சாற்றை இரண்டு தேக்கரண்டி அளவு தொடர்ந்து பத்து நாட்கள் சாப்பிட்டுவர மஞ்சள் காமாலை குணமாகும்.

250 மில்லி முள்ளங்கி சாற்றில் 500 கிராம் சர்க்கரையைக் கலந்து கொதிக்க வைத்து குளிர்பானமாகத் தயாரித்து 6 கிராம் அளவில் காலை, மாலை இரண்டு வேளை சாப்பிட்டால் ஈரல் பலப்படும். இருமல் குணமாகும்.

முள்ளங்கியை அரைத்து கல்லீரல் உள்ள பகுதியில் பூசினால் கல்லீரல் வீக்கம் குறையும்.

செவ்வாழைப்பழத்துடன் சிறிது தேனும் இளநீரும் கலந்து குழைத்து உண்டால் அம்மை, டைபாய்டு, காமாலை போன்ற நோய்களுக்கு நல்ல மருந்தாகவும் நல்ல உணவாகவும் அமையும்.

கடுக்காயை நன்கு உலர்த்தி தூள் செய்து காலை, மாலை பாலில் ஒரு சிட்டிகை அளவு கலந்து சாப்பிட்டு வந்தால் சில நாட்களில் மண்ணீரல் வீக்கம் குணமாகும்.

ஒன்று அல்லது மூன்று கிராம் மஞ்சள் தூளை தினசரி மூன்று முறை தண்ணீரில் கலந்து சாப்பிட்டு வர மஞ்சள் காமாலை குணமாகும்.

கரிசாலை இலை, தும்பை இலை, கீழாநெல்லி சம அளவு அரைத்து கொட்டைப் பாக்களவு மோரில் காலை, மாலை கொடுத்து வர மஞ்சள் காமாலை தீரும்.

பத்து கிராம் கரிசாலை இலையுடன் இரண்டு கிராம் மிளகு சேர்த்து வெண்ணெய் போல் அரைத்து மோரில் கலக்கி காலை, மாலை இருவேளை சாப்பிட்டு வர மஞ்சள் காமாலை, பாண்டு சோகை முதலிய நோய்கள் தீரும்.

கீழாநெல்லியுடன் சமன் கரிசலாங்கண்ணி சேர்த்து அரைத்து பாலுடன் 45 நாட்கள் சாப்பிட கல்லீரல் பழுது, பாண்டு சோகை,இரத்தமின்மை தீரும்.

நாள்தோறும் ஒரு துண்டு பப்பாளிப் பழம் சாப்பிட்டு வர கல்லீரல், மண்ணீரல் வீக்கம் குறையும்.

பாகற்காயை வற்றலாக்கி வறுத்து உண்டுவர மூலம், காமாலை, கல்லீரல் மண்ணீரல் குறைபாடுகள் தீரும்.

20 கிராம் முதல் 40 கிராம் வரை ரோஜாப்பூவை குடிநீராக்கி வடிக்கட்டி பால், சர்க்கரை வட்டி உண்ண வாதபித்த நீர் மலத்துடன் வெளியேறும்.

ரோஜாப்பூவுடன் இரண்டு பங்கு சீனாக் கல்கண்டு கலந்து பிசைந்து சிறிது தேன் கலந்து 5 அல்லது 6 நாட்கள் வெய்யிலில் வைக்க குல்கந்து ஆகும். கழற்சிக்காய் அளவு தொடர்ந்து சாப்பிட இதயம், கல்லீரல், நுரையீரல், இரைப்பை, சிறுநீரகம், குடல், ஆசனவாய் முதலியவை பலமாகும்.

ஒரு தேக்கரண்டி வில்வ இலைச் சூரணத்துடன் ஒரு தேக்கரண்டி கரிசலாங்கண்ணிச் சாறு கலந்து கொடுக்க மஞ்சள் காமாலை விரைவில் தீரும்.

5 கிராம் உலர்ந்த பழைய வேப்பம் பூவை 50 மில்லி கொதிநீர் விட்டு மூடி வைத்திருந்து வடிக்கட்டிச் சாப்பிட்டு வர பசியின்மை, உடல் தளர்ச்சி நீங்கும். கல்லீரலை நன்கு இயக்குவிக்கும்.

-சுஜாதா மூர்த்தி

# ஆன்மீகம் என்றால் என்ன?



ஆன்மீகம் என்றால் என்ன?ன்னு 10 பேரைக் கேட்டா, அந்த பத்து பேரும் பத்து விதமான பதிலளிப்பாங்க. என்ன அவுங்க அவுங்க அனுபவத்தையும், சூழ்நிலை கற்றுத் தந்த அறிவையும் வைத்துத்தான் ஆன்மீகம் என்ற சொல்லை பார்க்கின்றனர்.

ஆன்மீகம் என்ற சொல்லுக்கு உண்மையான பொருள்தான் என்ன? ஆன்மா + மீகம். அதாவது நமது ஆன்ம ஆற்றலை விரிவடைய செய்வதுதான் ஆன்மீகம். நமக்குள்ளே சரியான விழிப்புணர்வை ஏற்படுத்துவதே மிக சரியான ஆன்மீகம்.

ஆமாம், நாம் வாழும் வாழ்க்கைக்கு இந்த ஆன்மீகம் எந்த வகையில், நமக்கு தேவைப்படுகின்றது. நாம் உடுத்துகின்ற உடைக்கு, சுத்தமும் தூய்மையும் தேவைப் படுகின்றது. அப்படி இரண்டும் இணைந்து இருந்தால்தான், அது சரியான ஆடையாக கருதப்படு கின்றது. அதுபோல்தான் நம் ஆன்மா தூய்மையாக இருக்க ஆன்மீகம் தேவைப்படு கின்றது.

ஆன்மீகத்தை சரியாக, முறையாக தெரிந்தவருக்கு மனதில் குழப்பம் இல்லை. சலனம் இல்லை. நோய் இல்லை. பயம் இல்லை. வாழ்க்கையில் எதுவுமே இல்லை. இருப்பது ஒன்று மட்டும்தான் மனதில் மகிழ்ச்சி.

ஆம். மனதில் மகிழ்ச்சி மட்டும் தான் இருக்கும். இறைவன் நமக்கு மகிழ்ச்சியை மட்டும்தான் கொடுத்திருக்கின்றான். இந்த உலகம் மகிழ்ச்சியால் மட்டும் நிறைந்திருக் கின்றது. நாம் தான் இல்லாத துன்பத்தை தேடித்தேடி கண்டுபிடித்து துன்பப்படு கின்றோம். துன்பம் என்ற ஒன்றே இந்த உலகத்தில் இல்லை. வாழ்க்கை வாழ்வதற்கே அதுவும் மகிழ்ச்சியாக வாழ்வதற்கே!.

ஒவ்வொருவர் கர்மாவின் படி, பிறப்பின் கணக்கு வழக்கு ஆரம்பிக்கின்றது. இதில் சிலர் பிறவியிலே உள்ளொளியை உணர்ந்தவனாக பிறந்துவிடுகின்றனர். அவர்களை இந்த சமூகம் ஞானி என்று அழைக்கின்றது. இந்த சமூகத்திற்கு ஞானத்தை போதிக்கும் பொறுப்பு அவனிடம் சேர்கின்றது. அப்படிப் பட்டவன் ஞானத்தை போதிக்கின்றனான்.

சில பேருடைய கர்மா, இயல்பாக பெரும் செல்வ வளம் பெறத்தக் கவராக அமைந்துவிடு கின்றது. அதனால் இந்த சமூகத்தில் அவன் பெரும் செல்வந்தனாக வாழு கின்றான். இவன், தானமாக, தர்மமாக, ஊதியமாக, கூலியாக பல வடிவில், தான் பெற்ற செல்வத்தை கொடுக் கின்றான். செல்வத்தை கொடுப்பதனால் இவன் முதலாளி என்று அழைக்கப்படுகின்றார். ஞானத்தை கொடுப்பவன் ஞானி என்று அழைக்கப் படுகின்றார்.

-சிவமனோகரன்






# அதிரடி வில்லன் அடுத்து ரெடி... தமிழ் சினிமாவை கலக்கும் ஸ்ரீபவன்



சார் ஆசிரியர் உங்களை கூப்பிடுகிறார் என்று அலுவலக உதவியாளர் சொன்னதும். ஆசிரியர் அறைக்குள் நுழைந்தேன். என்ன சார் சினிமா செய்திகள்ல "கெத்தே" இல்லையே. நம்ம மித்ரா டைம்ஸ் நோக்கமே மத்த வங்களை மோட்டிவேட் பன்றதான். நீங்கள் சினிமாவில் வளர்ந்து வரும் கலைஞர்களை பேட்டி எடுத்து வரலாமே என்று சொன்னார். சரி சார் என்று சொல்லிவிட்டு வெளியே வந்து விட்டேன். மறுநாள் பிரசாத் ஸ்டுடியோ ப்ரிவியூ ஷோ முடிந்து வெளியே வரும்போது

**அட இது நம்ம அவுட் இல்ல என்று பக்கத்தில் போய் எப்படி இருக்கீங்க அவுட் என்றேன்?**

என்ன பாஸ் நீங்களும் கலாய்க்கிறீங்க. எல்லாரும் ஸ்ரீபவன்கிற என் பேர மறந்துட்டு அவுட்டுனே கூப்பிடராங்க.





# "வட சென்னை"யில் வெற்றிக் கூட்டணி

**வெற்றிமாறன் - தனுஷ் - ஸ்ரீகூட்டணியில் வரவிருக்கும் "வடசென்னை" படத்திற்கு பிறகு ஸ்ரீபவன் பிஸி வில்லன் ஆயிடுவார்.**



பொல்லாதவன் படத்துல வெற்றி மாறன் சார் கொடுத்த வாய்ப்பு தான். அந்த படத்த பாத்துட்டு சூப்பர் ஸ்டார் பாராட்டினத மறக்க முடியாது.

**எனக்கு ஒரு டவுட் எத்தனை படம் பண்ணியிருக்கீங்க.**

80 பாஸ்.

**என்னது எண்பதா?**

'கண்ணுவக்காதீங்க பாஸ். மலையாளத்தில் 7, தெலுங்கில 4, படத்தையும் சேர்த்து எண்பது பாஸ்.

**முதல் படமே தல கூட பண்ணீங்க போல இருக்கு.**

ஆமாம் பாஸ். லிங்குசாமி சார் தான் என்னை ஜீ படத்துல அறிமுகப் படுத்தினார். பஸ்ட் டே, பஸ்ட் ஷாட் தல கூடதான். அது படபடப்பு கலந்த சந்தோஷம் பாஸ்.

**ஹீரோவை விட வில்லன் ரோல்ல கலக்குறீங்களே...**

ரஜினி சார், சத்யராஜ் சார், சரத் சார் எல்லாமே வில்லனா இருந்து பின்னாடி ஹீரோவான வங்க தான். ரத்ன குமார் சார் தான் என்னை ஹீரோவா அறிமுகப்படுத்தினார். கேரக்டர் ரோல் கூட நிறைய வருது. இருந்தாலும் நீங்கள் சொன்ன மாதிரி வில்லன் கேரக்டர் எனக்கு ஓர்க் அவுட் ஆகுதுனு எல்லாரும் சொல்றாங்க.

**தமிழ் சினிமாவை கலக்க அதிரடி வில்லன் அடுத்து ரெடினு சொல்லுங்க.**

அத ரசிகர்கள் தான் சொல்லனும் பாஸ்.

**பேட்டி- சினிமாவி**



விலாசம் படத்தில் ஹீரோவாக சுஜிபாலாவுடன்



# சினிமா

## பேயான ரெஜினா



செல்வராகவன் இயக்கி வரும் 'நெஞ்சம் மறப்பதில்லை' படத்தில் பேய் கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார் ரெஜினா. 'கான்' படம் ஒத்திவைக்கப் பட்டதைத் தொடர்ந்து எஸ்.ஜே.சூர்யா நடிக்க 'நெஞ்சம் மறப்ப தில்லை' என்ற படத்தை தொடங்கினார் இயக்குநர் செல்வராகவன். ரெஜினா, நந்திதா உள்ளிட்ட பலர் எஸ்.ஜே.சூர்யாவுடன் நடித்து வந்தார்கள்.

## ராணியாகிறார் தன்ஷிகா

ரஜினியுடன் 'கபாலி' படத்தில் நடித்திருக்கும் தன்ஷிகா அடுத்து நடிக்கும் படம் 'ராணி'. சமுத்திரகனியுடன் இணை இயக்குனராக பணியாற்றிய பாணி இப் படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமாகிறார். இப்படத்தின் பெரும் பகுதி படப்பிடிப்பு மலேசியாவில் நடைபெற விருப்பதால் விரைவில் இப்பட குழுவினர் மலேசியா பறக்க விருக்கின்றனர். இந்த படத்தை 'எம்.கே. ஃபிலிம்ஸ்' என்ற பேனரில் சி.முத்து கிருஷ்ணன் தயாரிக்கிறார்.



# மது அருந்துவதால் உடலில் ஏற்படும் பாதிப்புகள்

நாம் மது (இனி ஆல்கஹால் அல்லது சாராயம் என்று சொல்வோம்) அருந்தும்பொழுது சிறிது அளவினை நம் வயிறு உறிஞ்சிக் கொள்ளும். பெரும்பாலான அளவை சிறுகுடல் உறிஞ்சிக் கொள்ளும். அதனால்தான் உணவு உண்டபின்னர் மது அருந்தினால் போதை ஏற சற்று நேரமாகின்றது.

சாராயத்தின் செறிவினைப் பொறுத்து அது எத்தனை வேகத்தில் நம் உடல் உறிஞ்சிக்கொள்கின்றது என்பது மாறுபடும். உதாரணமாக பீரை விட விஸ்கி, பிராந்தி, வோட்கா போன்றவைகள் அதிவேகமாக உறிஞ்சிக்கொள்ளப்படும்.

உறிஞ்சப்பட்ட சாராயம் உடனடியாக நம் ரத்தத்தில் கலந்து உடலெங்கும் ஓடத் துவங்கும். அதே சமயத்தில் நம் உடலும் அதனை வெளியேற்ற சற்று பிரயத்தனப்பட்டு வேலை செய்யத் துவங்கும். சிறுநீரகம் தன் பங்கிற்கு ஓரளவைச் சிறுநீரில் கலந்து வெளியேற்றும். நுரையீரல் தன் பங்கிற்குச் சில அளவை மூச்சுக்காற்றில் வெளியேற்றும். (அதனால்தான் Breath Analyser-ல் கண்டு பிடிக்கின்றார்கள்)

கல்லீரல் தன் பங்கிற்கு பெரும்பாலான அளவை ஆல்கஹாலை உடைத்து அசிட்டிக் அமிலமாக மாற்றும். இத்தனை பேர் சேர்ந்து அந்த ஆல்கஹாலை வெளியேற்றப் போராடிக்கொண்டிருக்கையில் நாம் அதனை விட வேகமாக அதிக அளவில் மது அருந்தினால்... என்னாகும்?

அதனால்தான் அவைகள் விரைவில் தம் இயல்பில் குன்றி வலுவிழந்து செயலிழந்து போகின்றன. இதுவே ஒரு வகையில் மெதுவான தற்கொலை முயற்சி மாதிரிதான்.







சரி, இனி ஆல்கஹாலின் செயல்பாடு மூளையினை எப்படிப் பாதிக்கின்றது. இரத்தத்தில் கலந்து உடலில் பயணிக்கும் ஆல்கஹால் நம் மூளைக்கும் ஒரு பயணம் போகும்.

அதன் அளவை BAC என்பார்கள். அதாவது Blood Alcohol Concentration. இரத்தத்தில் ஆல்கஹாலின் செறிவு.*

BAC 0.03ல் இருந்து 0.12 சதவீதம் இருக்கையில், தான் ஒரு பெரிய பலசாலி, தன்னால் எதுவும் முடியும் என்று ஒரு எண்ணம் வரும். உலகில் எது வந்தாலும் சமாளிக்கும் தைரியம் தன்னிடம் உள்ளது என்று தோன்றும். இந்நிலையில் சரியான முடிவுகள் எதுவும் எடுக்க முடியாது. ஏனெனில், மனதில் முதலில் எது படுகின்றதோ அதுவே சரியானதாகத் தெரியும். அந்தச் சூழ்நிலையில் யாராவது எதாவது சொன்னாலும், அதற்கேற்றவாறே மனம் செயல்படத் தோன்றும்.

BAC 0.9ல் இருந்து 0.25 சதவீதம் இருக்கையில், தூக்கம் தூக்கமாக வரும். நினைவுகள் மழுங்கும். சற்று முன் நடந்த நிகழ்வுகள் கூட நினைவில் இருக்காது. வேகமாக இயங்க முடியாது. கையில் இருக்கும் மதுவைத் தடுமாறிக் கொட்டிவிட்டு அதனை வெறித்துப் பார்ப்பார்கள். உடல் ஒத்திசையாது. நிலை தடுமாறும். நடக்கையில் உடல் தள்ளாடும். கண் பார்வை மங்கும். கேட்கும் திறன், சுவை உணர்தல், தொடுதல் போன்ற உணர்வுகளில் தடுமாற்றம் அல்லது இல்லாமல் போய்விடும்.

BAC 0.18ல் இருந்து 0.30 சதவீதம் இருக்கையில், தான் என்ன செய்கின்றோம் என்று அவருக்கே தெரியாது. குழப்பமாக இருக்கும். ஒன்று அதீத பாசக்காரராக மாறி விடுவார் அல்லது அதீத கோபக்காரராக மாறிவிடுவார். அதிகம் உணர்ச்சிவசப்படுவார். பார்வை தெளிவாக இருக்காது. பேச்சுக் குளறும். உடலின் Reflex செயல்படாது. தொடு உணர்வு நன்கு மழுங்கிவிடும். எதையேனும் எடுக்க வேண்டும் என்றால் கை அந்தப் பொருளின் பக்கத்தில் போய்த் துழாவிக்கொண்டிருக்கும். காரணம் பார்வை, மூளை, கை இவற்றிற் கிடையேயான ஒத்திசைவு இல்லாமல் போயிருக்கும். வலி தெரியாது.

BAC 0.25ல் இருந்து 0.4 சதவீதம் இருக்கையில், மட்டையாகி விடுவார். எந்தவொரு வெளித்தூண்டல்களும் அவரைப் பாதிக்காது. எழுந்து நிற்க முடியாது, நடக்க முடியாது. வாந்தி எடுக்கலாம். நினைவு தப்பிவிடலாம்.

BAC 0.35ல் இருந்து 0.50 சதவீதம் இருக்கையில், நினைவு முழுவதும் தப்பிவிடும். ஸிமீயீறீமீஜ் சுத்தமாகப் போய்விடும். கருவிழிகூட வெளிச்சத்தில் சுருங்காது விரியாது. உடல் சில்லிட்டுப் போகும். மூச்சு விடுதல் குறைந்து போகும். இதயத் துடிப்பு குறைந்து விடும். இறந்து போக அதிக வாய்ப்புள்ளது.

மதுவை ஒழிப்போம்.



# அகரத்தில் ஓர் இராமாயணம்

இராமாயண கதை முழுதும் 'அ' என்று ஆரம்பிக்கும் வார்த்தைகளால் வடிவமைக்கப் ட்டுள்ளது.

" இதுவே தமிழின் சிறப்பு.."

அனந்தனே அசுரர்களை அழித்து, அன்பர்களுக்கு அருள அயோத்தி அரசனாக அவதரித்தான்.

அப்போது அரிக்கு அரணாக அரசனின் அம்சமாக அனுமனும் அவதரித்ததாக அறிகிறோம்.

அன்று அஞ்சனை அவனிக்கு அளித்த அன்பளிப்பு அல்லவா அனுமன்?

அவனே அறிவழகன், அன்பழகன், அன்பர்களை அரவணைத்து அருளும் அருட்செல்வன்!

அயோத்தி அடலேறு, அம்மிதிலை அரசவையில் அரசனின் அரியவில்லை அடக்கி, அன்பும் அடக்கமும் அங்கங்களாக அமைந்த அழகியை அடைந்தான் .

அரியணையில் அமரும் அருகதை அண்ணனாகிய அனந்தராமனுக்கே! அப்படியிருக்க அந்தோ ! அக்கைகேயி அசூயையால் அயோத்தி அரசனுக்கும் அடங்காமல் அநியாயமாக அவனை அரண்யத்துக்கு அனுப்பினாள்.

அங்கேயும் அபாயம்! அரக்கர்களின் அரசன் , அன்னையின் அழகால் அறிவிழந்து அபலையை அபகரித்தான்

அந்த அடியார்களில் அருகதையுள்ள அன்பனை அரசனாக அரியணையில் அமர்த்தினர்.

அடுத்து அன்னைக்காக அவ்வானரர் அனைவரும் அவனியில் அங்குமிங்கும் அலைந்தனர், அலசினர்.

அனுமன் , அலைகடலை அலட்சியமாக அடியெடுத்து அளந்து அக்கரையை அடைந்தான்.

அசோகமரத்தின் அடியில் , அரக்கிகள் அயர்ந்திருக்க அன்னையை அடிபணிந்து அண்ணலின் அடையாளமாகிய அக்கணையாழியை அவளிடம் அளித்தான் அன்னை அனுபவித்த அளவற்ற

அவதிகள் அநேகமாக அணைந்தன. அன்னையின் அன்பையும் அருளாசியையும் அக்கணமே அடைந்தான் அனுமன்.

அடுத்து, அரக்கர்களை அலறடித்து , அவர்களின் அரண்களை , அகந்தைகளை அடியோடு அக்கினியால் அழித்த அனுமனின் அட்டகாசம் , அசாத்தியமான அதிசாகசம்.

அனந்தராமன் அலைகடலின் அதிபதியை அடக்கி , அதிசயமான அணையை அமைத்து, அக்கரையை அடைந்தான்.

அரக்கன் அத்தசமுகனை அமரில் அயனின் அஸ்திரத்தால் அழித்தான்.

அக்கினியில் அயராமல் அர்ப்பணித்த அன்னை அவள் அதி அற்புதமாய் அண்ணலை அடைந்தாள்.

அன்னையுடன் அயோத்தியை அடைந்து அரியணையில் அமர்ந்து அருளினான் அண்ணல் .

அனந்தராமனின் அவதார அருங்கதை அகரத்திலேய அடுக்கடுக்காக அமைந்ததும் அனுமனின் அருளாலே.

-விடாரண்யம்





# தாழ்வு மனப்பான்மையை போக்க சில உளவியல் வழிகள்...!

நீங்கள் அழகு என்பதை முதலில் நீங்கள் நம்புங்கள். நிறத்திற்கும் அழகிற்கும் சம்பந்தமில்லை என்பதை ஏற்றுகொள்ளுங்கள். யாரும் சொன்னாலும் ரசித்தாலும் தான், நான் அழகு என்று நினைப்பதை நிறுத்துங்கள். உங்களை நீங்களே ரசியுங்கள்..

எந்த மொழி சரளமாக பேச முடியவில்லை என்றாலும் கவலை கொள்ளாதீர்கள். உங்களை நக்கல் செய்பவரிடம் துணிச்சலாய் எதிர்த்துத் சொல்லுங்கள் இங்கு பலருக்கு அவரவர் தாய் மொழியையே சரியாகப் பேசத் தெரியாதென்று..

உங்களால் எது முடியாது. உங்களுக்கு எது தெரியவில்லை என்று யாரேனும் சொன்னாலும், அதை விரைவில் கற்றுக் கொண்டு முடித்துக் காட்ட வெறித் தனமாய் முயற்சி செய்யுங்கள்..

என் வாழ்க்கை சோகம் நிறைந்தது என்று நினைக்காதீர்கள். எல்லாம் நிறைவாய் இருக்கும் வாழ்க்கை இங்கு யாருக்குமே அமைவதில்லை என்பதே உண்மை..

உங்களுக்கு எதுவும் தெரியாது. எதிரில் நிற்பவருக்கு எல்லாமே தெரியும் என்று ஒரு போதும் நினைக்காதீர்கள். இந்த எண்ணம் இருந்தால் நீங்கள் சொல்ல வந்ததை சரியாக தடுமாற்றம் இன்றி சொல்லி முடிக்க முடியாது..

கேள்வி கேட்பதற்கும் உங்களை முன் நிறுத்துவதற்கும் மொழி புலமை அவசியம் என்று நினைக்காதீர்கள். உலகில் சரியாக சிந்திக்க வைத்த கேள்விகளை கேட்ட நிறையப் பேர் மொழிப்புலமை இல்லாமல் தங்களுக்கு தெரிந்த வார்த்தைகளைக் கொண்டு தங்கள் கேள்விகளை சரியாக புரியவைத்தவர்கள்..

அழும் போது தனியாக அழுங்கள். நீங்கள் அழைத்தாலும் சேர்ந்து அழ இங்கு யாரும் வரப்போவதில்லை என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள். கண்ணீரில் துக்கத்தை கரைத்து தூர எறிந்து விட்டு முன் செல்லுங்கள்.

உங்கள் அன்பு எந்த இடத்தில் நிராகரிப்பட்டாலும் இழப்பு உங்களுக்கில்லை, நிராகரித்தவருக்கே என்பதை புரிந்துக் கொள்ளுங்கள்...

-எம்.எஸ்.எம்.



# கோஹினூர் வைரம் கடத்தப்பட்ட கதை

இந்தியாவிற்குள் நுழைந்த பிரிட்டிஷார் கல்கத்தா, சென்னை, பம்பாய் மற்றும் மராட்டியப் பகுதிகளைப் பிடித்தபின், அவர்களது கவனம் பஞ்சாப் மீது திரும்பியது.

அப்போது பஞ்சாபை ரஞ்சித் சிங் (Ranjith Singh, 17/10/1839) என்ற மன்னர் சிறப்பாக ஆட்சி செய்து வந்தார். பிரிட்டிஷாரின் வலிமையை அவர் அறிந்திருந்தாலும், எந்த ஒரு சூழ்நிலையிலும் அவர்களுக்கு அடிபணிந்து போய்விடக் கூடாது என்ற கொள்கையில் உறுதியாக அவர் இருந்தார்.

இந்தியாவில் நிஜாம் (ஹைதராபாத்) போன்ற மன்னர்கள் பிரிட்டிஷாருக்கு பகிரங்க ஆதரவு தெரிவித்தனர். அதனால் அவர்களுடன் சண்டையிட வேண்டிய சூழ்நிலை பிரிட்டிஷாருக்கு ஏற்படவில்லை. ஆனால் ரஞ்சித் சிங் போன்ற சுயமரியாதையுள்ள மன்னர்களிடம் அவர்கள் மோதித்தான் ஆக வேண்டும் என்ற சூழ்நிலை ஏற்பட்டது.

மேலும் ரஞ்சித் சிங்கிடம் (Ranjith Singh) விலையுயர்ந்த நவரத்தினங்கள், அணிகலன்கள், கலைப் பொருட்கள், அரிய பொக்கிஷங்கள் ஆகியவை கொட்டிக் கிடந்தன. நிஜாம் மன்னரிடமிருந்து பல்வேறு மன்னர்களிடம் கை மாறிய மிகவும் விலை மதிப்பற்ற கோஹினூர் வைரமும் (Kohinoor diamond) அப்போது ரஞ்சித் சிங்கிடம் தான் இருந்தது. ஆகவே, அவை அத்தனையையும் கொள்ளையடித்து விட வேண்டும் என்று எண்ணிய பிரிட்டிஷார் தங்களது முழு கவனத்தையும் பஞ்சாபின் மீது திருப்பினர்.

இதற்கிடையே ரஞ்சித் சிங் மரணமடைந்தார். அவருக்குப் பின் பதவியேற்ற அவரது மகனும் சில நாட்களில் மரணமடைய அவரது மகன் (ரஞ்சித் சிங்கின் பேரன்) பஞ்சாபின் மன்னராக முடிசூடப்பட்டார். திடீரென ஒரு நாள் சந்தேகத்திற்கிடமான முறையில் அவரும் மரணமடைய, அடுத்து பஞ்சாபை ஆளும் வாரிசு யார் என்ற சண்டை அங்கு நடந்தது. ரஞ்சித் சிங்கின் உறவினர்கள் பலர் அங்கே தங்கள் அதிகாரத்தை நிலை நிறுத்த முயற்சி செய்து கொண்டிருந்தனர்.

பஞ்சாபின் தென் பகுதியில் சட்லெஜ் நதி (Sutlej River) வரை தனது எல்லை என்று ரஞ்சித் சிங் முதலில் பிரிட்டிஷாருடன் வரையறுத்து ஒப்பந்தம் செய்திருந்தார். 1845 ஆம் அண்டு பஞ்சாபின் மன்னராக இருந்த ஜிந்தான், பிரிட்டிஷார் பஞ்சாபை ஆக்கிரமித்து விடுவார்களோ என்று பயந்தான்.

அதை எதிர்பார்த்துக் காத்திருந்த பிரிட்டிஷார் சீக்கிய மன்னர் ஜிந்தான் மீது போரைத் துவக்கினார். இதுதான் “முதல் ஆங்கிலேய சீக்கியப்போர்“ (First Anglo-Sikh War) எனக் குறிப்பிடப் பட்டது. பிரிட்டிஷார் முதலில் பஞ்சாபி லிருந்த முக்கிய நகரமான லாகூரைக் கைப்பற்றினர். இதனால் சீக்கியர்கள் சம்மதித்தனர். அதன்படி அப்போது பஞ்சாபின் ஒரு பகுதியாக இருந்த காஷ்மீர் உள்பட சில பகுதிகள் பிரிட்டிஷார் வசம் போனது.

அந்த ஒப்பந்தத்திலிருந்த இன்னொரு வாசகம் “ஷா சிஜா உல் முல்க்கிடமிருந்து (Sha-Sija-ul-Mulk) மன்னர் ரஞ்சித் சிங் எடுத்துக் கொண்ட கோஹினூர் வைரத்தை பிரிட்டன் மகாராணியிடம் ஒப்படைக்க வேண்டும்!“

ஒப்பந்தத்தில் எழுதியிருந்தபடி கோஹினூர் வைரம் பிரிட்டிஷார் வசம் ஒப்படைக்கப்பட்டது. அது பிரிட்டன் கொண்டு செல்லப்பட்டு, பிரிட்டிஷ் மகாராணியின் கிரீடத்தில் வைக்கப் பட்டது. அதுதான் இன்று வரை பிரிட்டிஷ் ராணியின் மகுடத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கிறது!

1848 ஆம் ஆண்டு பஞ்சாபில் ஏற்பட்ட வன்முறையில் இரு பிரிட்டிஷார் கொல்லப்பட்டனர். இந்த சம்பவம் இரண்டாம் சீக்கியப் போருக்கு (Second Sikh War) காரணமாக அமைந்தது. சில்லியன் வாலா (Chillian Wala) என்ற இடத்தில் பிரிட்டிஷ் படைகளுக்கும் சீக்கியப் படைகளுக்கும் இடையே நடந்த கடும் போரில், சீக்கியப் படைகள் அடித்து நொறுக்கப்பட்டன. மார்ச் 12,1849 அன்று சீக்கியப் படைகள் பிரிட்டிஷ் படையிடம் சரணடைந்தன. மார்ச் 30 அன்று சீக்கியப் பிராந்தியம் முழுவதும் பிற இந்திய பிரிட்டிஷ் பகுதிகளுடன் சேர்க்கப்பட்டன.

சீக்கிய சாம்ராஜ்ஜியத்தின் கடைசி வாரிசான துலீப் சிங் (Dulip Singh) ஒருவேளை பிற்காலத்தில் மக்கள் செல்வாக்குடன் தங்களுக்கு எதிராகத் திரும்பிவிடக் கூடாது என்பதற்காக அவரை கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றி பிரிட்டன் கொண்டு செல்ல பிரிட்டிஷ் தளபதி சர் ஹென்றி ஹார்டிஞ்சிடம் (Sir Henry Hardinge) பிரிட்டிஷார் ஒப்படைத்தனர்.

மதம் மாறிய துலீப் சிங், கூர்க் (Coorg) இளவரசியை திருமணம் செய்து கொண்டு, கிழக்கிந்தியக் கம்பெனியினர் பிரிட்டனில் வாங்கிக் கொடுத்த பங்களாவில் குடியேறினார். ★

# விளம்பரம் பார்த்து மனை வாங்க போறீங்களா?

தொடர் 2

அண்மை காலமாக நகரங்களை ஒட்டியுள்ள பகுதிகளில் புதுப்புது லே அவுட்கள் தினமும் முளைக்கின்றன. ஆயிரக்கணக்கில் போடப்படும் இந்த பிளாட்டுகளை எப்படியாவது விற்றுவிட வேண்டும் என்பதில் குறியாக இருக்கின்றன.

ரியல் எஸ்டேட் நிறுவனங்கள். டிவி. துணை நடிகைகளை வைத்து இடத்தின் அருமை பெருமை களை எடுத்துச் சொல்வதில் தொடங்கி, ஃப்ரீ சைட் விசிட் என பல வகையிலும் விளம்பரம் செய்கின்றன. இந்த இடங்களை நீங்கள் வாங்கப் போனால் என்னென்ன விஷயங்களில் உஷாராக இருக்க வேண்டும்? ஏற்கனவே போய் வந்தவர்களின் அனுபவங்களி லிருந்து இதை நன்றாகவே தெரிந்து கொள்ளலாம். சுவாரஸ்யமான அந்த அனுபவங்களின் தொகுப்பு இதோ.

**சொல்வது ஒன்று காட்டுவது வேறு...!**

அரை கிரவுண்ட் மனை 40,000 ரூபாய் என விளம்பரம் செய்வார்கள். விலை குறைவாய் இருக்கிறதே என நீங்கள் போனால், மாட்டிக்கொள்வீர்கள். சென்னை மயிலாப்பூரை சேர்ந்த கண்ணப்பனின் அனுபவம் இது. 'வந்தவாசி அருகே அரை கிரவுண்ட் மனை 40,000 ரூபாய் என டிவியில் விளம்பரம் பார்த்தேன். ஒரு லட்ச ரூபாயில் இரண்டு மனை வாங்கிப் போடலாம் என்று நினைத்து மனையைப் பார்க்கப்போனேன். அங்கு போனவுடன், '40 ஆயிரம் ரூபாய் பிளாட்கள் எல்லாமே வித்துடுச்சு. நான்கு பிளாட் தான் மிச்சம் இருக்கு' என்று லேஅவுட்டின் கடைசியில் ஒரு இடத்தைக் காட்டினார்கள். அது பிடிக்கவில்லை என்பதைத் தெரிந்து கொண்டவுடன், 'இதை விட நல்ல இடம் அதோ அங்க இருக்கு! ஆனா, அரை கிரவுண்டு ஒரு லட்ச ரூபாய்' என்கிறார்கள். 'அரை கிரவுண்டு 40 ஆயிரம் ரூபாய்ன்னுதானே சொல்லி கூட்டிக்கிட்டு வந்தீங்க' ன்னு கேட்டால், 'அதைத்தான் காட்டினோமே! உங்களுக்கு வேணுமின்னா அந்த இடத்தையே வாங்கிக்கிங்க!' என்கிறார்கள். அவர்களின் மார்க்கெட்டிங்க் தந்திரத்தைப் புரிந்து கொண்ட நான் இடமே வேண்டாம் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன்' என்றார் கண்ணப்பன்.

**பத்திரச் செலவு இலவசம்...!**

இன்றிலிருந்து ஐந்து நாட்களுக்குள் முழுப் பணம் கட்டினால் பத்திரப்பதிவு இலவசம் என சில ரியல் எஸ்டேட் நிறுவனங்கள் பளிச்சென விளம்பரம் செய்கின்றன. இந்த பத்திரச் செலவு பெரும்பாலும் 5,000 ரூபாயாகத்தான் இருக்கும்.

இந்த உண்மை தெரியாத சிலர், சொற்ப பணத்துக்கு ஆசைப்பட்டு, அதைவிட பல மடங்கு பணத்தை இழக்கிறார்கள். பத்திரச் செலவு இலவசம் என யாராவது சொன்னால், முதலில் எவ்வளவு என்பதை தெரிந்து கொள்வது நல்லது. 1.52 லட்ச ரூபாய் மதிப்புள்ள (உண்மையில்) இடங்களுக்கு இது மாதிரியான சலுகைகளை தந்தால் மட்டுமே அவற்றை பரிசீலனை செய்யலாம்

**இலவசங்கள் மூலம் இழுப்பு...!**

மந்தமாக இருக்கும் பிளாட்களின் விற்பனையை பரபரப்பாகக்கவே இந்த இலவச இழுப்பு! அண்மையில் நண்பர் ஒருவர் இரண்டு லட்ச ரூபாய் தந்து ஒரு மனை வாங்கினார். அவர் வாங்கிய பிறகு அந்த இடத்தை யாருமே வாங்க வில்லையாம். ஆனால் ஒரு பிளாட் வாங்கினால் ஒரு ஸ்கூட்டி இலவசம்! இடத்தின் விலை 2.5 லட்ச ரூபாய்! என சமீபத்தில் அறிவிக்க, சில நாட்க களிலேயே அத்தனை இடங்களும் விற்றுத் தீர்ந்ததாம். இடத்தின் விலை அநியாயத்துக்கு ஏற்றிவிட்டுத்தான் இப்படி இலவசங் களைத் தருகிறார்கள் என்பது தெரியாத சில அப்பாவிகள் லட்சக் கணக்கில் பணத்தை இழக் கிறார்கள்.

**பெண்கள் சென்டிமெண்ட்...!**

இன்னும் சில நிறுவனங்கள் பெண்கள் பெயரில் பத்திரப் பதிவு செய்தால், தங்க நாணயம், பட்டுப் புடவை என்கின்றன. இரண்டு அல்லது மூன்று லட்ச ரூபாய் மனைக்கு இரண்டாயிரம் மூவாயிரம் ரூபாய் பட்டுப் புடவையை கூடுதலாக தருவதில் லே அவுட் போட்டவர்களக்கு எந்த நஷ்டமும் வராது, இந்த தந்திரம் தெரியாத பெண்கள், அந்த இடத்தை வாங்கியே தீர வேண்டும் என ஆண்களை டார்ச்சர் செய்வதுதான் கொடுமை!

**சிப்காட் வருது...!**

ஏதாவது ஒரு பகுதியில் சிப்காட் வருவதாக அரசு அறிவித்தால் அந்த அறிவிப்பை பயன்படுத்தியே இடங்களை விற்றுவிடத் துடிக்கின்றன சில ரியல் எஸ்டேட் நிறுவனங்கள். அரசு அறிவித்த சிப்காட் பேட்டை பத்து, பதினைந்து கி.மீ. பக்கத்துலதான் இருக்கு என்று சொல்லியே இடத்தை விற்றுவிடு கிறார்கள். தப்பித்தவறி ஏதாவது ஒரு தொழிற்சாலை இருக்கும்பட்சத்தில், அதையும் சிப்காட் லிஸ்ட்டில் சேர்த்துச் சொல்லிவிடுகிறார்கள். ஒரு இடத்தில் 400 அடி சாலை வருகிறது. சிப்காட் வருகிறது என்று சொன்னால், அதெல்லாம்





உண்மையா என்று தீர விசாரித்து, உறுதி செய்துகொள்ளாமல் அட்வான்ஸ் பணத்தை அவசரப்பட்டு தராதீர்கள்

**இருக்கு... ஆனா இல்லை...!**

பல இடங்களில் கார்னர் பிளாட் களை ஏஜென்டுகள் அல்லது புரமோட்டர்கள் அல்லது அவர் களுக்கு வேண்டப்பட்டவர்கள் வேண்டுமென்றே புக் செய்து விடுகிறார்கள்.

நீங்கள் அந்த இடத்தைக் கேட்டால், ஆபீஸில் கேட்டு சொல்கிறேன் என்பார்கள். பிறகு சார், நீங்க அதிர்ஷ்டசாலி! நீங்க கேட்ட இடமே கிடைச்சுடுச்சு! என்று கொஞ்சம் இழுத்தடித்துவிட்டு தருவார்கள். செயற்கையான தட்டுப் பாட்டை உருவாக்கி இடம் விற்கும் முயற்சிதான் இது என்பது தெரியாமல் கார்னர் பிளாட் கிடைச்சுடுச்சு என்று சந்தோஷமாக இடத்தை வாங்கிக் கொண்டு போகிற நல்லவர்களும் பலர் உண்டு.

-எம்.எஸ்.எம்.

# நீர் சிகிச்சை



தினமும் அதிகாலையில் தூங்கி எழுந்தவுடன் பல் துலக்குமுன் ஆறு குவளை (1.26 லிட்டர்) நீர் பருகுவதால், உடலின் உட்புற உறுப்புக்கள் தூய்மையாக் கப்பட்டு, கழிவுப் பொருட்கள் வெளி யேற்றப்படுகின்றன. வெப்பம் குறைந்து, குளிர்ச்சி பெற்று, மலச்சிக்கல் மறைகின்றது. (இதை நம் முன்னோர்கள் 'உஷை பானம் 'என்றழைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது) தண்ணீரைக் குடித்தபிறகு, ஒரு மணி நேரத்திற்கு காபி, டீ போன்ற பானங்களையோ, பிஸ்கட், பழம் போன்ற தின்பண்டங்களையோ சாப்பிடக் கூடாது. இது மிக மிக அவசியமானது, முக்கியமானது. இதைக் கவனத்தில் கொண்டு நடைமுறைப் படுத்த வேண்டும்.

காலையில் தண்ணீர் குடிப்பதற்குத் தயாராகும் வகையில், முதல் நாள் இரவுச் சாப்பாட்டை முடித்த பிறகு, படுக்கைக்குச் செல்லுமுன்பு, நரம்புமண்டலத்தைத் தூண்டக்கூடிய பானங்களையோ, பொருட்களையோ (மதுபானம் மற்றும் போதைப்பொருட்கள்) சாப்பிடக்கூடாது. இந்த நிபந்தனையும் முக்கியமானது. இரவே பல் துலக்கிக்கொள்வது நல்லது. தண்ணீரில் கிருமிகள் கலந்திருக்கக் கூடும் என்ற சந்தேகம் இருக்குமானால், அதை முதல் நாள் இரவே கொதிக்க வைத்து, ஆற வைத்து வடிகட்டி, பத்திரப்படுத்திக் கொள்ளலாம்.

இம்முறை ஆரம்பத்தில் ஒரு சில நாட்களுக்கு சற்று சிரமமாகத் தோன்றலாம். பின்னர் பழக்கமாகிவிடும். மருந்து, மாத்திரை, ஊசி, டாக்டர், பணச் செலவு ஆகிய எதுவுமே இல்லாமல், இம்முறைப்படி நீரைப் பருகுவதால், என்னெற்ற நோய்கள் வருவது தடுக்கப்படுகிறது.

-சென்டம் சுரேஷ்



## ஓவியம் வரைந்தவர்



எஸ்.ஜானகி
IX-A Std
GOOD SHEPHERD
MATRICULATION HIGHER SECONDARY SCHOOL




# கேள்விகள் இங்கே! விடைகள்?

பாலில் உள்ளதை விட அதிக கால்சியம் உள்ள காய்கறி எது?

| | | | | |
|---|---|---|---|---|
| வெ | | | | ம் |

நமது இந்திய நேரம் எந்த இடத்தினை அடிப்படையாய் வைத்து கணிக்கப்படுகிறது?

| | | | | |
|---|---|---|---|---|
| அ | | | பா | |

தன் நாட்டு பெயரை அதன் தபால் தலையில் காட்டாத நாடு?

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இ | | | | | து |

உலகிலேயே அதிகமாக சினிமா தயாரிக்கும் நாடு எது?

| | | | |
|---|---|---|---|
| | | தி | |

கல்லில் வடித்த காவியம் என்று அழைக்கப்படுவது?

| | | | | |
|---|---|---|---|---|
| மோ | | | கு | |



S.SURYA
VII-B, SHERWOOD HALL SENIOR SECONDARY SCHOOL CHENNAI

சரியான விடைகளை 20.08.2016-க்குள் அனுப்பி வைக்க வேண்டும். குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் முதல் மூன்று சிறுவர்களுக்கு பரிசுகள் காத்திருக்கிறது.

அனுப்ப வேண்டிய முகவரி
ஆசிரியர்
மித்ராடைம்ஸ்
#501, சுருதிபிளாக், சித்ரா அவென்யூ,
9, சூளைமேடு ஹைரோடு, சென்னை-600 094
போன் : 044-23744661,23743007/8



# தொடரும் பலிகள்

இந்திய துணை கண்டத்தின் மேற்கு புறத்தில் அரபிக்கடலுக்கு இணையாக அமைந்துள்ளது மேற்கு தொடர்ச்சி மலை. அரபிக்கடலில் இருந்து வரும் குளிர்ந்த காற்றை தடுத்து அதன் மேற்பகுதியில் அமைந்துள்ள கேரளா மற்றும் மேற்கு கடற்ரையில் நல்ல மழையை தருகிறது. உலகில் பல்லுயிர் வளம்மிக்க எட்டு இடங்களில் மேற்கு தொடர்ச்சி மலையும் ஒன்றாகும். இங்கு, சுமார் 5,000 வகை பூக்கும் தாவரம், 139 வகை பாலூட்டி, 508 வகை பறவை, 176 வகை இருவாழ்விலங்கு வாழ்கின்றன. இம்மலைத்தொடர் மராட்டியம், குஜராத் மாநிலங்களின் எல்லையில் உள்ள தபதி ஆற்றுக்கு தெற்கே துவங்குகிறது. மராட்டியம், கோவா, கர்நாடகம், தமிழ்நாடு, கேரளா ஆகிய மாநிலங்கள் வழியாக சென்று கன்னியாகுமரியில் முடிவடைகிறது. இதன் நீளம் சுமார் 1,600 கி.மீ. இதன் சராசரி உயரம் 900 மீட்டர். இம்மலைத்தொடர்களின் பரப்பளவு சுமார் 1,60,000 சதுர கி.மீ. இம்மலைத்தொடர், மராட்டியம் மற்றும் கர்நாடகத்தில் சாயத்ரி மலைத்தொடர் என அழைக்கப்படுகிறது. தமிழகத்தில் ஆனைமலை, நீலகிரி மலைத்தொடர் எனவும், கேரளாவில் மலபார் பகுதி, அகத்திய மலை எனவும் அழைக்கப்படுகிறது.

பசுமை வாய்ந்த இம்மலைக்காடுகளில் "சோலைமந்தி" என்னும் குரங்கு, "மிளா" என்னும் மான், புலி, சிறுத்தை, யானை, காட்டுப்பன்றி உள்ளிட்ட விலங்குகள், மலை இருவாச்சி, மலைப்புறா, மயில் உள்ளிட்ட பறவை இனங்கள் அதிகளவில் வாழ்கின்றன. இவற்றில், இரைதேடி குடியிருப்பு பகுதிக்குள் அடிக்கடி ஊடுருவும் விலங்குகளில் ஒன்று யானை. இதற்கு இன்னொரு காரணமும் உண்டு. இதன் வழித்தடங்கள் முற்றிலும் ஆக்கிரமிக்கப்பட்டு விட்டன. ரியல் எஸ்டேட், கல்வி நிறுவன கட்டிடங்கள், ஆன்மிக தலங்கள் என வனநிலங்கள் பிரிக்கப்பட்டு விட்டன. மனிதர்கள் ஆக்கிரமிப்பு அதிகரித்துவிட்டது. இதனால், யானை அதன் வழிப்போக்கில் செல்ல முடியாமல் தடம் மாறுகின்றன.



விளைவு, குடியிருப்பு பகுதிக்குள் நுழைகின்றன.

முதல்முறை தடம் மாறும் யானைகள், பின்னர், உணவுக்காக அதே இடத்துக்கு மீண்டும் படையெடுக்கின்றன. இதனால், யானைமனித மோதல் ஏற்படுகிறது. உயிரிழப்பு தவிர்க்க முடியாதது ஆகிவிட்டது. கோவை மண்டலத்தில் மட்டும் ஆண்டுக்கு சராசரியாக 15 பேர் யானை தாக்கி உயிரிழக்கின்றனர். கரும்பு, வாழை, சோளம், தக்காளி உள்ளிட்ட விளைநிலங்களை காக்க அமைக்கப் பட்டுள்ள மின் வேலியில் சிக்குதல், வனப்பகுதியை ஒட்டியுள்ள ரயில்தண்டவாளத்தை கடக்க முயற்சிசெய்தல், வனத்துறையினர் மயக்க ஊசி செலுத்தி உயிருடன் பிடிக்க முற்படுதல் உள்ளிட்ட பல காரணங்களால் ஆண்டுக்கு 25க்கும் மேற்பட்ட யானைகள் உயிரிழக்கின்றன. கோவை மண்டலத்தில், யானைகள் ஊருக்குள் புகுவதை தடுக்க மலையடிவாரத்தில் அகழி தோண்டப்பட்டு இருந்தாலும், அதையும் தாண்டி ஊருக்குள் புகுந்து அட்டகாசம் செய்கின்றன. யானைகளை விரட்ட வனத்துறை, வேட்டை தடுப்பு காவலர்கள் மற்றும் யானை பாதுகாப்பு படையினர் இருந்தாலும் அதை கட்டுப்படுத்த முடியவில்லை.

நீலகிரி மலைப்பகுதியில், சிறுத்தை, கரடி, புலி உள்ளிட்ட விலங்குகளும் உணவுக்காக குடியிருப்பு பகுதிக்குள் நுழைந்து விடுகின்றன. தொடர் அட்டகாசம் செய்த காரணத்தால் நீலகிரி மலைப்பகுதியில் மட்டும் கடந்த 10 ஆண்டுகளில் 2 புலி, அதிரடிப் படையால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளது. கரடிகளும் உயிர்ப் பலியாகியுள்ளன.

ஊருக்குள் ஊடுருவும் வனவிலங்கு களை மீண்டும் பத்திரமாக வனத்துக்குள் அனுப்பும் முயற்சியில் வனத்துறையினர் தொடர் தோல்வியை தழுவுகின்றனர். காரணம், இவர்களிடம் போதிய உபகரணங்கள், பயிற்சி இல்லை. இந்த விஷயத்தில் வனத்துறையினர் தங்களை மேம்படுத்திக்கொள்ளா விட்டால், வனவிலங்குமனித மோதல் தொடர்வதை தடுக்க முடியாது. உணவுதேடி ஊருக்குள் வரும் வனவிலங்கு உயிரிழப்பு, மனித உயிரிழப்பு ஆகியவற்றையும் தடுக்க இயலாது.

**–ஸ்ருதி லஷ்மி**
XI-VIDYAA VIKAS MATRICULATION HIGHER
SECONDARY SCHOOL, KARAMADAI

# ஞாயிறு கோயில்

## “மாதம் ஒரு ஆலயம்”

ஒரே ஒரு ஞாயிறு மட்டும் ஞாயிறு சென்று பாருங்கள்! புரியவில்லையா? சென்னையிலிருந்து 30 கி.மீ. தொலைவில் உள்ள ஞாயிறு என்ற கிராமத்திற்குச் சென்று, அங்கே அருள் புரியும் ஞாயிறையும் அதாங்க. சூரிய பகவானையும் புஷ்ப ரதேஸ்வரரையும் வணங்கிப் பாருங்கள். உங்கள் வாழ்க்கையில் ஒரு நல்ல வித்தியாசம்... சீரிய மாற்றம் ஏற்படுவதை உணர்வீர்கள். ஞாயிறு கோயிலுக்குள் நுழைந்ததுமே உங்கள் மனசுக்குள் பூப்பூக்கும். ஆலயத்திற்கு வந்திருக்கிறோமா அல்லது ஏதாவது சோலைக்குள் தவறி நுழைந்து விட்டோமா என்ற ஐயம் எழும். ஆம். எங்கு திரும்பினாலும் பசுமை பசுமை. அறுகம்புல் தோட்டம், மலர்ச்செடிகளின் கூட்டம் என்று இயற்கையே இறைவனாகக் காட்சியளிக்கும் உணர்வு எழும்.ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலான தொன்மை மிக்க ஞாயிறு ஆலயத்தின் சிறப்பை ஒரு ஞாயிற்றுக்கிழமை முழுக்கச் சொல்லிக் கொண்டே போகலாம். சுந்தரமூர்த்தி நாயனாரின் துணைவியான தெய்வமகள் சங்கிலி நாச்சியார் அவதரித்த பூமி, சாகுந்தல காவியம் போற்றும் கண்வமகரிஷி முக்தி பெற்ற புண்ணிய இடம், ஆதிசங்கரரால் சொர்ணாம்பிகை ஸ்தாபிக்கப்பட்ட கோயில் என்று, பட்டியல் தொடர்ந்து கொண்டே போகும்.கண் சம்பந்தப்பட்ட நோய்க்கும் இந்தக் கோயிலுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது. இந்தக் கோயில் எழுந்ததே ஒரு மன்னனின் கண்கள் குருடானதால் தான்! பல நூறு ஆண்டுகளுக்கு முன்னால் சிவ பக்தனான சோழ மன்னன் ஒருவன் ஆந்திரத்தில் உள்ள நெல்லூர் வரை, படையெடுத்துச் சென்று வெற்றி வாகை சூடிவந்தான். இந்த ஊருக்கு அருகில் உள்ள சோழவரத்தில் முகாமிட்டான். அதிகாலையில் சிவ பூஜை செய்வதற்காக செந்தாமரை மலர்களைத் தேடி, இறுதியில் இந்த ஞாயிறு கிராமத்திற்கு வந்தான், குளம் முழுக்கத் தாமரை மலர்கள். அதிலும் நடுவில் ஒரு மலர், ஓங்கி உயர்ந்து மன்னனைப் பார்த்துப் புன்னகைப்பது போல் அசைந்தது. அதனைப் பறிக்க முயற்சித்தான், சோழன்.அவன் நெருங்க, நெருங்க மலர் விலகிற்று, போக்குக் காட்டிற்று. பொறுமையிழந்த மன்னவன், அந்த அபூர்வ தாமரை மலரை நோக்கித் தன் கத்தியை எடுத்து வீசினான். அந்தக் கத்தி, தாமரை மலர் இத்தனை நாட்களும் பாதுகாத்துக் கொண்டிருந்த, அதன் அடியில் இருந்த சிவலிங்கத்தின் மேல் பட்டுச் சிதறியது.அந்த லிங்கத்திலிருந்து ரத்தம் பீறிட்டு, குளம் முழுக்க குங்கும நிறமானது. அத்துடன் பேரொளி எழும்பிற்று. அதைப் பார்த்த மன்னவனின் கண்கள் பறி போயிற்று. மன்னன் மயங்கி விழுந்தான். அவன் வந்த குதிரை வெறிகொண்டு எங்கோ ஓடிற்று.அப்புறம் என்ன? சிவபெருமான் பேரொளியுடன் ஞாயிறாக மன்னனுக்குக் காட்சி தந்து மீண்டும் பார்வை தந்தார். அந்த இடத்திலே தனக்கு ஒரு கோயில் எழுப்பும்படி கட்டளையிட்டார்.மலர் வழியாக இறைவன், காட்சி தந்ததால் `புஷ்பரதேஸ்வரர்' (பூத்தேர் ஆண்டார்) என்று அந்தச் சிவலிங்கத்திற்குப் பெயரிட்டு குளத்தங்கரையிலேயே அழகுற ஆலயம் அமைத்தான் மன்னன். இந்தச் சிவலிங்கத்தின் மேல், கத்தி பட்ட வடு இருப்பதை இன்றும் காணலாம்! மன்னன் கண்பார்வையைத் திரும்பப் பெற்றதால், இங்கே வந்து இறைவனை தரிசனம் செய்தாலே கண் சம்பந்தமான நோய்கள் தீரும் என்பது நம்பிக்கை

சித்திரை மாதம் முதல் நாளிலிருந்து ஏழு நாட்களுக்கு சூரிய ஒளி சிவபெருமான் மற்றும் அம்மன் பாதங்களில் விழுவது கண்கொள்ளாக் காட்சி. சனி தோஷம் நீங்க திருநள்ளாறு செல்வது போல சூரிய திசை, சூரியபுத்தி நடக்கிறவர்கள் வழிபடவேண்டிய ஆலயம் இது. பல்லவர் காலத்து கமலவிநாயகர், முருகப்பெருமான், காலபைரவர், நடராஜர், சிவகாமி அம்மன், சங்கிலி நாச்சியார் ஆகியோரும் இங்கே காட்சி தருகிறார்கள்.

``சென்னையிலிருந்து 30 கி.மீ. செங்குன்றம், சோழவரம், அருமந்தை வழியாகச் செல்லலாம்.

ரெட்ஹில்ஸிலிருந்து 57சி, டி57, ஏ58 போன்ற பஸ்கள் செல்கின்றன. 13 கி.மீ. தூரம்."

**கோயில்திறந்திருக்கும் நேரம்**

தினசரி காலை 7-11 மணி, மாலை 4-7மணி, ஞாயிறு மட்டும் காலை 6-11மணி, மாலை4-7மணி. உணவு, தங்குமிடம் வசதி எதுவும் கிடையாது.

வாழ்க வளமுடன் நலமுடன்

**-சுஜாதா மூர்த்தி**



# கொழுப்பு குறைய வீரபத்ராசனம்

இன்றைய காலகட்டங்களில் கணினி முன் அமர்ந்து நாள் முழுவதும் வேலை செய்பவர்கள் அதிகம். அதிக நேரம் அமர்ந்து கொண்டிருப்பதால் இடுப்பில் கொழுப்பு சேரும். சோம்பேறித் தனமாகவே இருக்கும். அப்படிப் பட்டவர்களுக்கு இந்த யோகாசனா கை கொடுக்கும்.

வீரபத்ராசனம் : வீர என்றால் போர்வீரன் பத்ர என்றால், நல்லவிதமான என்று பொருள். வீரனைப் போன்ற நிலையில் நின்று கொண்டு இந்த ஆசனம் செய்வதால் வீரபத்ராசனம் என்று பெயர் வந்துள்ளது.

**வீரபத்ராசனம் செய்வது எப்படி என பார்க்கலாம்** : முதலில் தடாசனத்தில் அதாவது நேராக நில்லுங்கள். சுவாசத்தை ஆழ்ந்து இழுத்து விடவும். பின்னர் இரு கால்களையும் விரித்துக் கொண்டு நிற்கவும். இப்போது வலது பாதத்தை வலது பக்கமாக பார்க்கும்படி திருப்பவும். வலது காலை இப்போது மடக்குங்கள். எவ்வளவு முடியுமே அவ்வளவு மடக்கி நிற்க வேண்டும். உடலையும் வலது பக்கம் திருப்பவும். கைகளை மேலே தூக்கி உள்ளங்கைகளை வணக்கம் சொல்வது போல் வைத்திருங்கள். இடது காலை வளைக்காமல் நீட்டியிருக்கவும். உடலை லேசாக வளைக்கவும். தலையும் லேசாக பின்பக்கம் வளைக்கவும். இந்த நிலையில் 30 நொடிகள் நிற்கவும். பின்னர் இதேபோல் இடது காலுக்கு செய்யுங்கள்.

**பலன்கள்** : இடுப்பை சுற்றியுள்ள கொழுப்பு குறையும். கால்கள் வலுப்பெறும் . தோள்பட்டைகள் அகன்று பலம் பெறும். மார்புக் கூடு விரிவடைந்து கம்பீர தோற்றம் உண்டாகும். உடலுக்கு புத்துணர்ச்சி தரும். மன அழுத்தத்தைப் போக்கும்


**குறிப்பு** : கழுத்து, மூட்டு, பாத வலிகள் உள்ளவர்கள் இந்த ஆசனத்தை தவிர்க்கவும்.

–G.ராம்மோகன்





FRIENDSHIP IS POWER
MIBC
MITRA INTERNATIONAL BUSINESS CLUB






## முதல் நாள் முதல் காட்சி நீங்கள் பார்க்க வேண்டுமா?

## உங்களுக்கும் ரூ.500 மதிப்புள்ள டி-சர்ட் வேண்டுமா?



## அப்படியானால் நீங்களும் எங்கள் கிளப்பில் சேர்ந்தால்தானே!

ஆம். மித்ரா இன்டர்னேஷனல் பிசினஸ் கிளப்பில் நீங்களும் உறுப்பினராகி மேற்கண்ட சலுகைகளை பெறலாம்.

**மித்ரா இன்டர்னேஷனல் பிசினஸ் கிளெப்பின் நோக்கம் என்ன?**

பல்வேறு தொழில் செய்து கொண்டிருப்பவர்களை இந்த உலகம் அவர்களை கவனிக்கச் செய்து நட்பு வட்டாரத்தை விரிவடையச் செய்வதே ஆகும். ஏழை, பணக்காரர் என்ற வித்தியாசம் இல்லாமல் உறுப்பினராகலாம்.

ஒவ்வொரு வருடமும் மித்ரா இன்டர்னேஷனல் பிசினஸ் கிளெப் நிகழ்ச்சி நடைபெறும். அந்த வகையில் இந்த வருடம் மித்ரா குரூப்ஸ் ஆப் கம்பெனியின் ஒன்றான MIBC நிகழ்ச்சியானது **“மித்ரா குரூப்ஸ் ஆப் கம்பெனியின்**

# MIBC ALBUM












**மகிழ்ச்சி திருவிழா"**-வாக நடைபெறவுள்ளதை இந்த தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

**குறுகிய நாட்களே உள்ளதால் விரைந்து MIBC-ல் உறுப்பினராகுங்கள் தொழிலில் ஒரு படி மேலே செல்லுங்கள்.**

**விண்ணப்ப படிவத்தை www.mitrainternational business club. com இணையதளத்திலிருந்து பதிவிறக்கம்** (down load) **செய்து பூர்த்தி செய்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.**

ரூ.500/- **தொகையினை காசோலை** (Cheque). **அல்லது வரைவோலை** (DD) **எடுத்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.**

Demand draft in favour of Mitra International business club - Payable at Chennai.(or)

**Mitra International Business Club**
HDFC Bank,
A/c.NO. 50200005349520
IFSCODE : HDFC 0000206
T.Nagar Branch

## MITRA INTERNATIONAL BUSINESS CLUB

**501, சுருதி பிளாக், சித்ரா அவென்யூசூளைமேடு, சென்னை-94**

**போன் : 044-23743007/8**





# ஜூலை மாத பலன்கள்

-சோதிடர் : சிவமனோகரன்,செல் : 7200097256

### மேஷம்

கடமையில் கண்ணும் கருத்துமாக இருக்கும் மேஷ ராசி அன்பர்களே! 3-ம் இடத்தில் புதன், சூரியன், சுக்கிரன் இருப்பதால் பள்ளியில் சேர்வதற்கு போராட்டம், கருத்து பரிமாற்றத்தில் சிக்கல் போன்றவை ஏற்பட்டாலும் சுக்கிரனின் சாதகமான தன்மையால் வெற்றியில் முடியும். குரு ஐந்தாம் இடத்தில் சாதகமாக இருப்பதால் பணப்புழக்கம் இனிதாக இருக்கும். பணிகள் சீராக நடக்கும். உடன் பணிபுரிவோர் உதவியாக இருப்பர். சனி அஷ்டமத்தில் இருப்பதால், குடும்பத்தில் குழப்பம் தோன்றி மறையும். சனிகிழமை அன்று சனீஸ்வரனுக்கு எள் தீபம் இட மகிழ்ச்சி உண்டு.

பரிகாரம் : ஞாயிறு அன்று விநாயகருக்கு அருகம்புல் சாத்தி வழிபடவும்.

### ரிஷபம்

எதையும் எளிதில் சமாளிக்கும் ஆற்றல் பெற்ற ரிஷப ராசி அன்பர்களே! சந்திரன் 12-ல் நிற்க இம்மாதம் ஆரம்பத்தினால் மனக்குழப்பம், உடல்சோர்வு வந்து நீங்கும். சூரியன், புதன், சுக்கிரன் இரண்டில் இருப்பதால் வீண் செலவுகள் தோன்றும். சனிவக்கரகதியில் இருப்பதால், குடும்பத்தில் கணவன், மனைவிக் கிடையே கருத்து வேறுபாடு ஏற்படும். மாணவர்களுக்கு படிப்பு சற்று மந்தமாக இருக்கும். வியாபாரிகளுக்கு வியாபாரம் அமோகமாக நடக்கும்.

பரிகாரம் : செவ்வாய் அன்று இராகு காலத்தில் துர்க்கை அம்மனை வழிபட்டு வர மருத்துவ செலவு குறையும்.

### மிதுனம்

பிறருக்கு உதவி செய்வதில் ஆர்வம் காட்டும் மிதுன ராசி அன்பர்களே, ராசியிலே புதன், சூரியன், சுக்கிரன் பலம் பெற்று விளங்குவதால், எடுத்த காரியம் இனிதே நடக்கும். குழந்தைகள் வழியில் ஏற்றம் காணுவீர்கள். உடன் பிறந்தோர் உதவியாக இருப்பர். சூழ்நிலை அனைத்தும் சாதகமாக இருக்கும். இருப்பினும் மனதுக்குள் மனக்குறை ஒன்று இருக்கும். செவ்வாய் பகவானால் உடல் நலத்தில் ஆறுதலும், சனிபகவானால் குடும்பத்தில் குழப்பம் விலகுதலும் உண்டாகும்.

பரிகாரம் : வியாழன் காலை தட்சணா மூர்த்தியையும் மாலை சனீஸ்வரனுக்கும் செவ்வாய் பகவானுக்கும் விளக்கேற்றி வழிபடவும்.

### கடகம்

சுயநலம் காட்டாமல் பொதுநலம் பெரிதென நினைக்கும் கடக ராசி அன்பர்களே! குருவும், ராகுவும் சாதகமாக இருப்பதால், வருமானம் நன்றாக இருக்கும். வாக்கினில் நிதானம் தேவை. இம்மாதம் உங்களின் திறமை மிக தெளிவாக பளிச்சிடும். சூரிய புதன் மறைந்து இருப்பதால் அரசாங்கத்தின் ஆதரவு இருக்காது. அரசுவழி நன்மை கிடைக்காது. சுக்கிரன் 1-ல் இருப்பதால், காதல் கனியும், கணவன்-மனைவி ஒற்றுமை மேலோங்கும். காலஹஸ்தியில் பரிகாரம் பண்ணிக் கொள்வது நல்லது.

பரிகாரம் : ஞாயிறு அன்றும் வெள்ளி அன்றும் சிவ ஆலயத்தில் ராகு கால பூஜை செய்வது நன்று.

## சிம்மம்

செல்வத்தை மிகவும் நேசிக்கும், எதிர்காலம் சிறப்பாக இருக்க கவனமுடன் இருக்கும் சிம்மராசி அன்பர்களே! ராசியில் குருவும் ராகுவும் இருப்பதால் மனதில் மகிழ்ச்சி குதூகலம் நிறைந்து இருக்கும். செவ்வாய் 3-ல் இருப்பதால் உங்கள் எதிர்பார்ப்புகள் சற்று தாமதமாக வந்து உங்களை உற்சாகப் படுத்தும். பட்டம், பதவி பெறுவதற்கான வாய்ப்பு சிறப்பாக உள்ளது. மனைவியுடன் கருத்து வேறுபாடு தோன்றி மறையும். குழந்தைகள் கல்வி சீர்பெறும். உடல் நலத்தில் கவனம் தேவை. வாகனம் ஓட்டும் போது அதிக கவனம் தேவை.

பரிகாரம்: சனிக்கிழமை சனி பகவானுக்கு எள்தீபம் ஏற்றவும்.

## கன்னி

எதிரிகளை மன்னித்து அவர்களுக்கு நல்லது செய்யும் கன்னி ராசி அன்பர்களே! செவ்வாய் சாதகமாக உள்ளதால் சகோதரர் வகையிலும், உறவினர் வகையிலும் ஒத்துழைப்பு கிடைக்கும். கல்வி மேன்மை அடையும். தொழில் சிறப்பாக இருக்கும். குரு பகவான் 12-ல் இருந்தாலும் வருமானம் சீராக இருக்கும். சுக்கிரன் பலம் பெற்று காணப்படுவதால், அத்தியாவசிய பொருட்களும் ஆடம்பரப் பொருட்களும் வாங்கி மகிழ்வீர்கள். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்பு தேடிவரும்.

பரிகாரம் : புதன் அன்று அம்மனை வழிபட்டால் செல்வம் பெருகும்.

## துலாம்

எல்லோரையும் நட்பாக பார்க்கும் நல்ல குணம் உடைய துலாம் ராசி அன்பர்களே! 2, 7 க்கு அதிபதி செவ்வாய் இருப்பதால் குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்பட்டு மறையும். குழந்தைகளின் கல்வி மேன்மை அடையும். சனி செவ்வாய் சேர்க்கை சாதகமாக இல்லாவிட்டாலும் சனி வக்கிரத்தில் இருப்பதால் தொழில் குளறுபடி நீங்கும். 9-ல் சுக்கிரன், புதன், சூரியன் இருப்பதால், வருமானம் சிறப்பாக இருக்கும். குடும்ப தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். ஒளிமயமான சூழ்நிலைக்கு வழி பிறக்கும். நண்பர்கள் மூலம் நன்மை கிடைக்கும்.

பரிகாரம் : திருநள்ளாறுக்கு சென்று சனி பகவானை வழிபட வேண்டும்.

## விருச்சிகம்

சர்வம் சிவமயம் என்பதை மனதில் உறுதி யாக நம்பும் விருச்சிக ராசி அன்பர்களே! காரியத்தில் தாமதம், வார்த்தையில் குழப்பம், கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் போதல், இப்படி எதிர்மறை பலன்கள் இருந்தாலும், சுகஸ்தானத்தில் கேது பகவான் வீடு மாற்றத்தையும், சுக்கிரன், சூரியன், புதன் சிறப்பாக இருப்பதால் வங்கி கடன் உள்ளிட்டவை ஏற்படும். காதல் வெற்றி பெறும். கணவன்-மனைவி ஒற்றுமை மேலோங்கும். சுப காரியம் இனிதாகும். தந்தையின் உடல் நலத்தில் கவனம் தேவை.

பரிகாரம் : செவ்வாய்க்கிழமை ராகு காலத்தில் துர்க்கையை வழிபடவும். வெள்ளிக்கிழமை முருகப் பெருமானை வழிபடவும்.



## தனுசு

மற்றவர்கள் மகிழ் வோடு வாழ வழி வகுக்கும் தனுசு ராசி அன்பர்களே! கேது சாதக மற்ற நிலையில் இருப்பதால் உடன் பிறப்புகள் வழியில் பிரச்சனை எற்படும். நண்பர்கள் எதிரிகளாக மாறுவர். உடல் உபாதை கொடுக்கும். 14-ம் தேதிக்கு பின்பு சூரிய பகவானின் மாற்றம் நட்பு வட்டாரத்தை விரிவுப்படுத்தும். சுக்கிரன், புதன் சாதகமாகவும் பாதகமாகவும் உள்ளதால், கலைத் துறையும் கல்வித்துறையும் சிறிது தடுமாற்றத்திற்குப்பின் மேம்படும். உடல் நலத்தில் கவனம் தேவை. மருத்துவ செலவுகள் தொடரும். நினைத்ததை செயல்படுத்த சிரமம் ஏற்படும்.

பரிகாரம் : வியாழனன்று தட்சிணாமூர்த்தி வழிபாடு வெள்ளி அன்று துர்க்கை வழிபாடு செய்தால் வாழ்வில் வளம் கூடும்.

## மகரம்

எதிர்ப்பை வென்று தைரியமாக செயல்படும் மகர ராசி அன்பர்களே! கேது 2-ல் இருப்பதால் வாக்கில் நிதானம் தேவை. கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் போவதும், குழப்பமான சூழ்நிலையும் உருவாகலாம். சூரியன், புதன், சுக்கிரன் சாதகமற்ற நிலையில் இருப்பதால் வியாபாரத்தில் மந்தமும், கலைத்துறையில் உள்ளவர்களுக்கு சற்று பின்னடைவும் அரசுவழியில் குழப்பமும் இருந்துவரும். இவை அனைத்து மாத பின்பகுதியில் நிவர்த்தியாகும். பணவரவில் சற்று கடினம் தோன்றினாலும், குருபகவான் வழிபாட்டால் மேம்படும். உடல் உஷ்ணம் கூடும். இளநீர், வெண்பூசணிக்காய் போன்றவற்றை பயன்படுத்தவும்.

பரிகாரம் : பிரதோஷ வழிபாட்டால் மேன்மை உண்டு.

## கும்பம்

நம்பிக்கை, நாணயம், நமக்கு எப்போதும் தேவை என்று பிறருக்கு கூறும் கும்ப ராசி அன்பர்களே ! சந்திரன், மூளையை குழப்பிக் கொண்டு இருந்தாலும், மனதில் பக்தி, வழிபாடு சிறப்பாக காணப்படும். இந்த மாத ஆரம்பத்தில் அரசாங்கத்தில் நன்மை, கல்வி துறையில் மேம்பாடும் கலைத்துறையில் உற்சாகமும் காட்டும். ஆனால் மாத பின்பகுதியில் சற்று பின்னடைவு ஏற்படும் கவனம் தேவை. குருவும் ராகுவும் வருமானத்தையும், செலவையும் மாறி மாறி கொடுப்பார்கள் குறிப்பாக மருத்துவச் செலவு அதிகரிக்கும்.

பரிகாரம்: சனிக்கிழமை விரதம் இருந்து சனீஸ்வரனுக்கு எள் தீபம் ஏற்றி வழிபடவும்.

## மீனம்

மற்றவரின் தவறை எடுத்துக்கூறி இனிமை யாக அறிவுரை வழங்கும் மீனராசி அன்பர்களே ! செவ்வாய் வக்ர நிவர்த்திக்கு பின் மகிழ்ச்சி உண்டு. தடைப்பட்ட காரியம் அனைத்தும் நிவர்த்தியாகும். குருபகவானின் பார்வைபலம் சாதகமாக உள்ளதால், வருமானம் சீர்படும், குலதெய்வ வழிபாடு நடைபெறும். வாகன போக்குவரத்தில் எச்சரிக்கை தேவை. வேலைவாய்ப்புக்காக காத்திருக்கும் அன்பர்களுக்கு வேலை வாய்ப்பு கூடும்.

பரிகாரம் : சிவனை வழிபடுங்கள் அது சிந்தையை குளிர்விக்கும்.

# EDUCATION TODAY !

"Education means all round development of the child"



Do you…………

make a smart classroom?

make classroom teaching active?

make teaching interesting and smart?

make interesting and smart classroom environment?

your teaching way is smart?

know the active teaching techniques?

What is the smart teaching?

If your answer is "Yes" than this article is for you.

Teachers can make teaching more interesting by Activity based learning. Activities bring activeness and smartness among the students. Active learning is more effective than other methodologies. It is very useful in primary education and kids education programs. The learning games and other games related activities are very useful in primary school teaching and kid's education. Teachers have to understand the relationship between learning and games. They have to discover the new learning games and have to use games in learning. Now a days different teaching methodologies are being discovered. Teachers have to choose the most effective methodology for their students. Actually the teaching should be an interesting thing for the teachers and the students also. Now several researchers have been working on Teacher's active. Our schools should be an interesting place for teaching learning experiences. So teachers have to discover the new and interesting methodologies according to the students learning level and their interests.

In smart school learning and smart class learning where education is provided by computers, internet and by multimedia, there are several educational websites providing the interactive learning environment for learners. Once students learn to operate the website, they are enabling to learn individually. In such an environment, the teacher's role is to facilitate in learning. The teacher has to make a different teaching strategy in such type of activity based learning. In primary and kids education, teacher has to make a different learning strategy, such as fun learning activities for kids, active learning games, active learning lesson plans etc. Teacher has to manage his active and smart classroom with innovative teaching learning resources and active methods of learning. He has to plan active learning lesson plans, activity based learning materials, active learning examples and also activity based educational games.


Teaching is the well known word for teachers. Teachers know the meaning of this word and know how to perform teaching. Sometimes they do not know the difference between teaching and facilitating in learning and it make a distance between the students and teachers. We have to understand the difference between "teaching" and 'facilitating in learning" because the both words are correlated with each other.

Instead of "to help the students in learning" or "facilitate the students in learning" is a quite fascinating and gentle concept. If teacher think that every student should be sound in his subject is his duty than teaching-learning process become innovative, active and interesting. In our classrooms teachers have to change his attitude about teaching process.

Teachers should become mentors and they should make students learn. Teaching means teacher is doing the act of teaching. Learning means students are doing the act of learning.

Active learning methodologies are very effective to find out students creativity and talent. Active learning methodologies are very smart methodologies very helpful to students in learning. Active learning methodologies and active learning classroom

techniques provide very smart teaching learning opportunities to teachers. If teacher is able to create an active learning environment in his class, he has to help the students in learning in various ways. In modern learning environment, we see that "learning" is a more popular word than




"teaching". Teachers have to understand the modern trends in teaching learning process. Teachers have to make learning more interesting and interactive, so that students may learn better.

Activity Based Learning provides great opportunities to the students through interesting activities. It may be used in our day by day classroom teaching easily. Now teacher's role is changing in learning. Teacher is as a facilitator in learning. There are several innovative and smart teaching learning methodologies to make our classroom smart, active, innovative and interesting.

In language teaching different interactive puzzles may be used to enhance student's reading and learning skills. We may prepare some learning materials on card sheet and the other media and may distribute to the students and observe the learning process.

This type of activity may be used in the group teaching where each student works and enjoy the learning in new environment of freedom.

There are different types of puzzles may be used in classroom teaching depending the students level such as primary school or middle school students. Teachers can prepare various simple educational puzzles for their students.

**Some examples:**

Join the letters and make the words.

Join the cards and make the picture.


Find the relation between words.

Teachers may use different Teaching games, along with teaching textbooks. Different types of teaching methodologies may be used in classrooms in language teaching to create student's interest in learning. Teacher can make the teaching learning experience more and more interesting using different type "Teaching Methodologies."

**Umadevi Duraisamy, M.A; M.Ed;**



# வி.ஐ.பி.வந்தால் மட்டுமே சுத்தம் செய்யும் திண்டுக்கல் மாநகராட்சி.





திண்டுக்கல்லில் சில மாதங்களாக முக்கியமான இடங்கள் மட்டுமே சுத்தமாக இருப்பதாகவும் மற்ற ஏழை வாழ் மக்கள் இருக்க கூடிய இடங்கள் அனைத்தும் குப்பை கழிவுகள் தேங்கி கிடக்கிறது. பலமுறை பல நாளிதழ் களில் புகார் அளித்தும் மாநகராட்சி அதிகாரிகளிடமும் நிர்வாகிகளிடமும் மன்றாடியும் நடவடிக்கை எடுக்கவில்லை. இந்நிலையில் மாநகராட்சி நிர்வாகம், கடந்த வாரம் வனத்துறை அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் அவர்கள் வாக்களார்களுக்கு நன்றி தெரிவித்து வரும் சாலைகள் மற்றும் தெருக்களில் மட்டுமே சுத்தம் செய்ததாக பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஒரு பக்கம் குற்றம் சாட்டினாலும் இன்னொரு தரப்பு அமைச்சர் அவர்கள் சுத்தமான மாநகராட்சியாக நோயில்ல நகரமாக திண்டுக்கல்லை மாற்றி விடுவார் என்று நம்புகின்றனர்.

**–திண்டுக்கல் முபாரக்**

# அப்படியா....!

✲ தயிராக மாற்ற முடியாத ஒரே பால் - ஒட்டகப்பால்.

✲ ஒட்டகத்தை விட அதிக நாட்கள் தண்ணீர் இன்றி வாழும் ஒரு உயிரினம் - கங்காரு எலி.



✲ பின்புறமாக மரம் ஏறும் விலங்கு - கரடி.

✲ ஒரு மோட்டார் வாகனத்தில் 30 சதவீதம் எரிபொருள் மட்டும்தான் வண்டி ஓடுவதற்கு பயன்படுகிறது. மீதமுள்ள 70 சதவீதம் எரிபொருள் கார்பன் மோனோ ஆக்சைடு என்கிற ஒரு நச்சு வாயுவாகத் தான் வெளியேறுகிறது.

✲ சீனாவில் ஒரு மனிதனின் பிறந்தநாள் அவன் தாய் வயிற்று கருவில் உருவாகும் நாளில் இருந்தே கணக்கிடப்படுகிறது.

✲ ஆக்டோபஸ்க்கு மூன்று இதயம் இருக்கும். அதன் ரத்தம் நீல நிறத்தில் இருக்கும்.குரங்குகளுக்கு இரண்டு மூளை இருக்கிறது.சூரியனின் வயது 470 கோடி ஆண்டுகள்(2010 ஆண்டு வரை). பூமியின் மீது காணப்படும் பழைய பாறைகளை கொண்டு இதை கணக்கிட்டுள்ளனர்.

✲ சுகபிரசவம் அல்லாமல் தன் தாயின் வயிற்றில் இருந்து கிழித்து வெளியே எடுக்கப் பட்டவர் ஜூலியஸ் சீசர் அதனால் தான் இந்த முறைக்கு சீசரியன் என்று பெயர் வந்தது.

✲ பிறந்து ஆறு முதல் எட்டு வாரங்கள் வரை குழந்தைகள் அழுதால் கண்ணீர் வராது. நான்கு வயது குழந்தைகள் ஒரு நாளைக்கு சுமார் 400 கேள்விகள் கேட்கும். நாம் நேற்று கட்டிய பள்ளி கூடங்கள் எல்லாம் இன்று விரிசல் விழும் நிலையில் இருக்க ஞ்ஷிஹூவாங்டி என்பரின் ஆட்சி காலத்தில் சீன பெருஞ்சுவர் கி.மு 200களில் கட்டப் பட்டது.

✲ தைவான் நாட்டில் உள்ள மூன்யூச் மரம் 4120 ஆண்டுகள் பழைமை யானவை.

✲ காட்டுக்கே ராஜா என்று சொல்லும் விலங்கு சிங்கம் ஆனால் அதான் ஆயுட்காலம் 15 ஆண்டுகள் தான். வயிறு நிரம்பி இருந்தால்தான் சிங்கம் கர்ஜிக்கும்.

✲ மிக சிறிய இதயம் கொண்ட விலங்கு - சிங்கம்."லங்கா வீரன் சுத்ரா " என்ற மத நூல் முழுவதும் ரத்தத்தால் எழுதப்பட்டது.தன் காதை (காது) நாக்கால் தொடும் ஒரே விலங்கு- ஒட்டகம்.

✲ இலைகள் உதிர்க்காத மரம் -- ஊசி இலை மரம்.காட்டு வாத்து கருப்பு நிறத்தில்தான் முட்டையிடும்.குளிர் காலத்தில் குயில் கூவாது.

✲ எடிசன் தன் வாழ்நாளில் மொத்தம் 1368 கண்டுபிடிப்புகளை அறிமுகப்படுத்தி உள்ளார்.

✲ அவர் மூன்று மாதங்கள் மட்டுமே பள்ளிக்கூடம் சென்றவர்.லியான்னடோ டாவின்சி ஒரு கையால் எழுதி கொண்டே மறுகையால் படம் வரையும் திறன் உடையவர்.

✲ அவர் வரைந்த உலகபுகழ் பெற்ற மோனாலிச ஓவியம் இடது கையால் வரையப்பட்டது.

✲ கரப்பான்பூச்சி தலையை வெட்டி எறிந்தாலும் அது தலை இன்றி ஒன்பது நாள் வரை உயிர்வாழும். ஒன்பதாவது நாளின் இறுதியில் அது பசியில் தான் இறந்து போகும்.

✲ கிளியும் முயலும் தன் பின்னால் இருப்பதை தலையை திருப்பாமலே கண்டு பிடித்து விடும்.

✲ யானையின் கால் தடத்தின் நீளம் அளந்து, அதை ஆறால் பெருக்கி வரும் விடையே -யானையின் உயரம்.

✲ கருவில் முதன் முதலில் உருவாகும் உறுப்பு -இதயம் மனிதன் இறந்து போனதும் முதலில் செயலிழக்கும் உறுப்பு - இதயம்

✲ வால்டிஷ்ணி மொத்தம் 32 ஆஸ்கார் விருதுகளை பெற்றுள்ளார். ஒரு தலை முறை என்பது 33 ஆண்டுகள்.

✲ பெரியார் பொதுக்கூட்டங்களில் மாநாடு களில் சுமார் 21400 மணிநேரம் பேசியுள்ளார். அவருடைய சொற்பொழிவை ஒலிநாடாவில் பதிவு செய்தால் 2 ஆண்டுகள் 5 மாதங்கள் 11 நாட்கள் வரை தொடர்ந்து ஒலிபரப்பாகும்.

✲ தத்துவம் பயின்று ஆன்மீகவாதியான பிறகுதான் கராத்தே வீரர் ஆனார் - புருஸ்லீ.

✲ சுவாரின் என்ற ஆஸ்திரேலிய நாட்டு பறவை குளிக்காமல் தன் கூட்டுக்குள் நுழையாது. விமானத்தில் இருக்கும் கருப்பு பெட்டி ஆரஞ்சு நிறத்தில் இருக்கும்.

✲ சீல்வண்டுகள் 17 ஆண்டுகள் தூங்கும்.

✲ புழுக்களுக்கு தூக்கம் கிடையாது. நாம் இறந்து பிறகும் கண்கள் 6 மணிநேரம் பார்க்கும் தன்மையுடையது.

**தொகுப்பு:**

**எஸ்.சுருதிலக்ஷ்மி**

XI STD-VIDYAA VIKAS MATRICULATION HIGHER SECONDARY SCHOOL KARAMADAI



# விழலுக்கு பாயும் நீராக வீணாகும் மு.க.ஸ்டாலின் உழைப்பு

மு.க.ஸ்டாலின் பற்றி அவர்கள் தந்தையும் தி.மு.க. தலைவருமான கருணாநிதி சொன்ன பதில் ஸ்டாலின் என்றால் உழைப்பு, உழைப்பு, உழைப்பு. என்றார்.

அந்த அளவுக்கு தி.மு.க.வை முன்னெடுத்து செல்வதில் மு.க.ஸ்டாலின் இளமைக்கால கருணாநிதியை நினைவூட்டுவதாக அக்கட்சியின் மூத்த தலைவர்கள் சொல்கிறார்கள். எதிர் கட்சி தலைவர்



பொறுப்புக்கு வரும் வரை, கடந்த 45 ஆண்டுகளாக கட்சியில் அவரது உழைப்பு அளப்பரியது. மேயராக, உள்ளாட்சித்துறை அமைச்சராக, துணை முதல்வராக என அவர் வகித்த அத்தனை பதவிகளுக்கும் பெருமை தேடிக்கொடுத்தார். நடைபெற்ற தேர்தலில் கூட அவரை முதல்வராக முன்னிருத்தியிருந்தால் ஆட்சியை தி.மு.க. பிடித்திருக்கும் என்று சுப்பிரமணியசாமி வெளிப்படையாகவே கருத்து தெரிவித்தார். கட்சியை கடந்த பொது மக்களும் அதை விரும்பியதாக இப்போது தெரிய வருகிறது. தொடர்ந்து தினந் தோறும், ம.தி.மு.க., தே.மு.தி.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளிலில் இருந்து அவர் முன்னிலையில் கட்சியில் இணைந்து வருகிறார்கள். அந்த அளவுக்கு மு.க.ஸ்டாலின் மீது கட்சி ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் மிகப்பெரிய செல்வாக்கு பெற்றவராக உள்ளார்.

ஆனால் மு.க.ஸ்டாலினின் உழைப்பு விழலுக்கு பாயும் நீராக போவதற்கு அவருடன் இருக்கும் சிலரின் நடவடிக்கைகளே காரணமாக அமைந்து விடுகிறது என்பதை மறுப்பதற்கோ, மறைப்பதற்கோ இல்லை.

இப்போதும் தாங்கள் ஆட்சியில் இல்லை என்பதை மறந்து விட்டு தி.மு.கவை சேர்ந்த சிலபேர் கட்டப் பஞ்சாத்து, நில ஆக்கிரமிப்பு ஆகியவற்றில் ஈடுபடுவதை பொதுமக்கள் வெறுப்போடும் பயத்தோடும் பார்க்கிறார்கள்.

2006-2011 தி.மு.க ஆட்சி செய்தபோது கொண்டுவந்த ஏராளமான திட்டங்களை அமுல்படுத்தியபோது அவர்கள் ஆட்சிதான் வரும் என்று எதிர் பார்த்த நிலையில் தி.மு.க. ஆட்சிக்கு வர முடியவில்லை. அதற்கு காரணம் முன்னணி தி.மு.க.வினரின் ஆதிக்கமும், அடாவடித்தனமும் தான் காரணம். 2016ல் ஆட்சிக்கு வருவதற்கான அத்தனை அம்சங்களும் இருந்தபோதும் வரமுடியாமல் போனதற்கு மதுரையில் பத்திரிகை அலுவலகத்தில் மூன்று பேர் எரித்துக் கொல்லப்பட்டதை மக்கள் மறக்காததுதான். சமீபத்தில் பெரிமேட் பகுதியில் பாரஸ்மல் ஜெயின் என்பவர் வெட்டி படுகொலை செய்யப்பட்ட போது, மு.க.ஸ்டாலின் அவர்கள் கூலிப்படையின் ஆதிக்கத்தை அ.தி.மு.க. கட்டுப்படுத்த வில்லை. என்று குறை கூறியபோது மக்கள் அதை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. ஏனெனில் தி.மு.க.விலும் சிலபேர் கட்டப் பஞ்சாயத்தில் ஈடுபடுவது குறித்து பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அருவறுப்பே காரணம்.

பொதுவாக அ.தி.மு.க.வில் ஏதேனும் புகார் அளிக்கப்பட்டால் சம்மந்தப்பட்ட நபர் மீது பாரபட்சமற்ற முறையில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப் படுகிறது. ஆனால் தி.மு.க.வில் அந்த மாதிரி நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படுவ தில்லை. அ.தி.மு.க. ஆட்சியில் பொது மக்கள் காவல்துறையினரிடம் ஏதேனும் புகார் தந்தால் உடனடியாக நடடிவக்கை எடுக்கப்படுகிறது. அ.தி.மு.க. வினரின் தலையீடோ, குறுக்கீடோ இருக்க காவல்துறை அனுமதிப்பதில்லை.



சட்டசபையில் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசும் எதிர்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின்

அதைப்போல அ.தி.மு.க. ஆட்சியில் தொழில் வளர்ச்சிக்கு தருகின்ற முக்கியத்துவத்தை விட ஏழைகளுக்கு வழங்கப்படும் இலவசத்திற்கு கவனம் செலுத்தப்பட்டது. அம்மா உணவகமும் அப்படித்தான். 100 யூனிட் மின்சாரம் இலவசமாக வழங்கப்பட்டுள்ள திட்டம் லட்சக்கணக்கான மக்களை சென்றடைந் திருக்கிறது. ஆனால் தி.மு.க. 2 மாதத்திற்கு ஒருமுறை கட்டும் மின் கட்டணத்தை மாதம் மாதம் கட்ட வைப்போம் என்றதை மக்கள் ஏற்கவில்லை.

தொழில் வளர்ச்சியில் கவனம் செலுத்தும் தி.மு.கவிற்கு அடித்தள மக்களை பற்றிய சிந்தனை குறைவே. இதையெல்லாம் கவனத்தில் கொண்டு மு.க.ஸ்டாலின் அவர்கள் குறைகளை களைந்தால் வரும் உள்ளாட்சி தேர்தல் மட்டுமல்ல பாராளுமன்ற தேர்தலிலும் அவரது உழைப்பு நிச்சயம் பலனைத்தரும்.

அவருடன் இருக்கும் நண்பர்கள், கட்சிக்காரர்கள், தொழிலதிபர்கள் அவருக்கு ஒத்துழைப்பு தந்தால் மட்டுமே அது சாத்தியமாகும்.

**கே. பாலகிருஷ்ணன்.**

## மித்ரா குரூப் ஆப் கம்பெனியின்

# மகிழ்ச்சித் திருவிழா

## விருதிற்கு தகுதியானவர்களை தேர்வு செய்ய

# வாசகர்களுக்கு ஒரு வாய்ப்பு

எதைத் செய்தாலும் அதை பிரம்மாண்டமாக செய்து காட்டுவது மித்ரா குரூப்ஸ் ஆப் கம்பெனி என்பதை இந் நிறுவனம் நடத்திய விழாக்களில் பங்கு பெற்றவர்கள் அறிவார்கள். அதன் அடுத்த கட்டமாக விரைவில் நடைபெற உள்ள மகிழ்ச்சித் திருவிழாவில் தொழில், சமூகம், அரசியல், கலை, இலக்கியம், விவசாயம் என பல்வேறு துறைகளில் சிறப்பாக பணியாற்றி வருபவர் களை ஊக்குவிக்கும் வகையில் விருது வழங்கப்பட உள்ளது. விருதிற்கு தகுதியானவர்களை தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு வாசகர்களாகிய நீங்கள் பெறுகிறீர்கள். எனவே, உடனடியாக தகுந்த ஆதாரங்களுடன் புகைப்படங்களை இணைத்து விருதிற்குரியவர்களின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தொடர்புக்கு**

501, சுருதி பிளாக், சித்ரா அவென்யூ, சூளைமேடு ஹைரோடு, சென்னை 600 094
போன் : **044-23743007/8.** e-mail : **mitragroups2015@gmail.com www.mitrahomemakers.com**



## தொழிலதிபர்களின் கவனத்திற்கு....

# விளம்பரம் செய்து விற்பனையை பெருக்கலாம்....













வியாபாரம் பெருக...விளம்பரம் செய்யலாமே! மித்ரா டைம்ஸ் மாத இதழ் பல்லாயிரக்கணக்கான வாசகர்களை தன்னகத்தே கொண்டு சிறப்பாக வெளி வருகிறது. அந்த வாசகர் களிடையே உங்களது தொழில் தொடர்பான விளம்பரங்களை அளித்தால் வியாபாரம் பெருக வாய்ப்பு உள்ளது.

இன்றே உங்களது நிறுவனத்தை பற்றி விவரங்களை எங்களுக்கு எழுதி அனுப்பி அத்துடன் கீழே குறிப்பிட்டுள்ள தொகைக்கு டிராப்ட் எடுத்து அனுப்பி வைக்கவும்.

## விளம்பரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| பின் அட்டை கலர் | - | ரூ. 15,000 |
| உள் அட்டை கலர் | - | ரூ. 10,000 |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | - | ரூ. 7,000 |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | - | ரூ. 3,500 |
| கால் பக்கம் கருப்பு வெள்ளை | - | ரூ. 2,000 |

**படித்துவிட்டு வேலையில்லையா? மித்ரா டைம்ஸ் வாங்க!**

படித்துவிட்டு வேலையில்லையே என்ற கவலை வேண்டாம். நமது மித்ரா டைம்ஸ் மாத இதழுக்கு 30% கமிஷன் அடிப்படையில் விளம்பரம் சேகரித்து மாதம் ரூ.25,000 சம்பாதிக்கலாம்.

**CONTACT**

501, Suruthi Block, Chitra Avenue, Choolaimedu High Road, Chennai - 94
Ph : 044-23743007 / 08, Mob. 8190828662 e-mail : mitragroups2015@gmail.com www.mitrahomemakers.com